Registered as a NewsPaper

இலவச பிரதி

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-05 | 21-09-2005 | புதன்கிழமை | ஓசை-216



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464.

இல:124. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-12760)



## திலீபன் மருத்துவ சேவை வருடாந்த விழாவில் தேசியத் தலைவருக்கு மக்கள் கேடயம் வழங்கினர்

### - திலீபன் நினைவு நிகழ்வு இடம்பெற்றது

(அலுவலக செய்தியாளர்)

மாங்குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா நேற்று இடம்பெற்றது. தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களுக்கான நினைவுக் கேடயம் இந் நிகழ்வில் இப்பிரதேச மக்களால் வழங்கப் பட்டது.அத்தோடு தியாகி திலீபனின் 6ஆம் நாள் நிகழ்வும் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது.

நேற்றுமாலை 4.30 மணியளவில் மருத்துவமனையின் அபிவிருத்திக்குழு தலைவர் கு.கருணேஸ்வரன் தலைமையில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை மருத்துவப்போராளி அருந்தா ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியினை புலிகளின் குரல் நிறுவனப்பொறுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை அரசு உடன் களைதல் வேண்டும்!

## சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமை வலியுறுத்து

(கொழும்பு)

*இலங்கையின் வட கிழக்கில் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஆயுதக்குழுக்களிடமிருந்து சிறிலங்கா அரசாங்கம் ஆயுதங்களைக் களைய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் தலைவர்களினால் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

நியூயோர்க்கில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கூடிய இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமைநாடுகளின் கூட்டத்தின் இறுதியில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில்,

2002 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகள் அமைப்பிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை பாதுகாப்பதிலேயே சமா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவின் 1-ஆவது பிரச்சாரக் கூட்டத்தில் ஜே.வி.பி ஆதரவாளர்களே அதிகம்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் முதலாவது தேர்தல் பொதுக் கூட்டம் கொழும்பு நகர சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் முன்வரிசையில் சிவப்பு அங்கி அணிந்த வர்களும் சிவப்புக் கொடிகளை ஏந்தியவர்களுமே பெருமளவில் காணப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## காவலிலுள்ள பொலிசாரை உறவினர்கள் சந்திப்பு

மன்னாரில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் பிரவேசித்த



மையின் காரணமாக கடந்த ஒன்பதாம்திகதியன்று தமிழீழ காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு தமிழீழ நீதிமன்றத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சப் இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிசாரையும் அவரது உறவினர்கள் நேற்று கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கிளிநொச்சியிலமைந்துள்ள தமிழீழ காவல்துறை சீர்திருத்தப்பள்ளியில் நேற்றுக்காலை 10.00மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை மேற்படி சந்திப்பு இடம் பெற்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிகளால் பொலிசாரின் உறவினர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## "விடுதலைப் போருக்கான தேசிய அறைகூவல்" கிளிநொச்சியில் நேற்று எழுச்சி மாநாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் தமிழீழ விடுதலைப் போருக்கான தேசிய அறைகூவல் மாநாடு நேற்றுக் காலை 10.15 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவை செயலர் சு.பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட மேல

(12 ஆம் பக்கம் பார்க்க)



## இரு படையினர் படுகாயம்!

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டைப் பகுதியில் உள்ள சிறிலங்காப் படையினரின் பாதுகாப்பு அரண் ஒன்றின் மீது நேற்று இரவு7.50 மணியளவில் அடையாளம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் இரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிசார் குறித்து தமிழீழ நீதிமன்றமே முடிவு செய்யும்

### அரசியல்துறைப் பொறுப்பாளர் விளக்கம்

மன்னார், அரிப்புப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்த போது கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று சிறிலங்காப் பொலிசாரை விடுதலை செய்வதா? அல்லது தொடர்ந்து தடுத்து வைப்பதா? என்பது குறித்து தமிழீழ நீதிமன்றமே முடிவு செய்யுமென தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார் என இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது தமிழீழ நீதிமன்றின் உத்தரவையடுத்து விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிசார் மூவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் விடுதலைப் புலிகளுக்கு கடிதம் அனுப்பியிருந்தார். அதற்கு பதிலளிக்கும் முகமாகவே தமிழ்ச்செல்வன் இக்கடிதத்தினை அனுப்பி வைத்துள்ளார்.இதேவேளை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று பொலிசாரும் எதிர்வரும் 27 ஆம் நாள் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள். அன்று கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

நான் ஆத்மார்த்தியாக உணர்கின்றேன் இன்றில்லா விட்டாலும் என்றோ ஒரு நாள் எனது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவார்கள்.

— தியாகி லெப்.கேணல் திலீபன்



# காணி நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்தினரால் நடமாடும் சேவை மூலம் கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட காணிகள் சம்பந்தமான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் நாளை திருவையாறு 1ஆம், 2ஆம் பகுதி கிராம மக்களுக்கான காணி சம்பந்தமான விசாரணைகள் திருவையாறு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் வைத்து காலை ஒன்பது மணிமுதல் பிற்பகல் நான்கு மணி வரையும் அதேபோன்று 23 ஆம் திகதியன்று ஆனந்தபுரம் கிராம மக்களுக்கான காணி அனுமதிப் பத்திரங்களில் கையொப்பம் இடும் நடவடிக்கைகள் ஆனந்தபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்தும் நடைபெறவுள்ளதெனவும், எனவே செயலக நடவடிக்கையில் கலந்துகொள்ளும் காணி உரிமையாளர்கள் தேவையான சகல ஆவணங்களுடனும் சமூகமளிக்கும் வண்ணம் கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலர் செ.ஸ்ரீரெங்கநாதன் வேண்டியுள்ளார். (சோ)

## மாதாந்தக்கூட்டம் பிற்போடல்

நாளை மாந்தை கிழக்கு அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவிருந்த முல்லை. மாவட்ட அரசாங்க அதிபரின் மாதாந்தக்கலந்துரையாடல் தற்போது தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் முல்லை. மாவட்டஅரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்பதனை முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறியத்தருகின்றார். எனவே மேற்குறிப்பிட்ட திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனைக்கு வருகை தருமாறும் தெரிவித்துள்ளார். (20)

# வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, 156 ஆம் கட்டை, வைரவர் கோவில் முன்பாக (A-9 அருகாமை 1/2 ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்குண்டு தொடர்புக்கு சீலன் இல-12, ஆனந்தநகர், சேவியர் கடைச்சந்தி, கிளிநொச்சி. (சி.12650)

### N.E.C
### A9 வீதி, கிளிநொச்சி

A/L Day class எமது தனித்துவமான ஆசிரியர்களால் ஆரம்பம் கலைப்பிரிவு - புதன் (21.09.2005) 9.00 மணிக்கு வர்த்தகப்பிரிவு, புதன் (21.09.2005) 4.00 மணிக்கு (6725)

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



### துவாரகன் ரஜனி

மூவிரண்டு ஆண்டின் முன்பே
முடிந்த உங்கள் வாழ்வால்
இடிவிழுந்தது எம் நெஞ்சில்
எம் உருவே உங்களை இழந்து
ஏங்கியது எம் மனது
அன்பாய் நாம் அழைக்க எம் முன்னே
நிற்பவரே எமைவிட்டு நீர்த்திரே
எம் கண்கள் தேடுதுங்களை
எத்தனை ஆண்டு வரினும்
அத்தனையும் உம் நினைவு சுமக்கும்
வற்றாத உம் பாசம்
வடித்தெடுத்த உம் உறவு நாங்கள்- எம்
சொத்தாக உமை நினைப்போம்.

தகவல்:-
தம்பிமார்.

(சி.12860)

# சாவு அறிவித்தல்




## தம்பையா செல்லையா

கற்சிலைமடுவை வசிப்பிடமாகக் கொண்ட தம்பையா செல்லையா காலமானார். அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், விவேகனந்தன், தெய்வேந்திரன், செல்வானந்தன், அருள்செல்வன் (போராளி தஷன்), மல்லிகாதேவி (ஆசிரியை கேப்பாப்புலவு), லலிதாதேவி, இராசாத்தி, கமலேஸ்வரி(போராளி தமிழ்செல்வி), சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் தருமரத்தினம், குணம், செல்வகுமார், மகேந்திரராஜா(போராளி பூவண்ணன்), சிறிகரன், இந்திராணி, அழகுராணி, ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னார் கலாஞ்சென்ற தம்பையா நாகலிங்கம், தம்பையா செல்லத்துரை. காஞ்சென்ற தம்பையா செல்லத்துரை ,காலஞ்சென்ற தம்பையா செல்லத்தம்பி ஆகியோரின் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 21.09.2005 (புதன் கிழமை) இன்று காலை பத்துமணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கற்சிலைமடு [illegible] இந்து மயானத்தில் பூதவுடல் தனகம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6727)



# அமெரிக்காவில் "றீற்றா" சூறாவளி அபாயம்
# புளோரிடாவில் இருந்து மக்கள் வெளியேற்றம்

(வோஷிங்டன்)

**அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை சூறாவளி தாக்கும் அபாயத்தை அடுத்து அங்கு வாழும் இரு பத்தி மூன்று இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடத்தை நோக்கி இடம்பெயரத் தொடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

றீற்றா எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தச் சூறாவளி தற்போது மெக்சிக்கோ குடாவை நோக்கி நகரத் தொடங்கியுள்ளதாகவும் இது மணிக்கு 178 கிலோ மீற்றர் வேகத்தில் பலமாக வீசும் என மியாமியில் உள்ள அமெரிக்க தேசிய சூறாவளி ஆய்வு நிலையம் அறிவித்துள்ளதை அடுத்து மியாமி பிரதேச அதிகாரிகள் மக்களைப் பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு அறிவித்தனர்.

புளோரிடாவிற்கு தென்கிழக்கே 505 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்த இந்தச் சூறாவளி மேற்கு மற்றும் வடமேற்குத் திசை நோக்கி 20 கிலோ மீற்றர் வேகத்தில் நகரும் என எதிர்பார்க்கப்படுவதாக வளி மண்டல வியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை,அமெரிக்காவை அடுத்தடுத்து சூறாவளி தாக்கிவருவதனால் அங்குள்ள மக்கள் அச்சம் காரணமாக தமது வாகனங்களுக்கு எரிபொருளை நிரப்புவதற்காக எரிபொருள் நிலையங்களில் நீண்டவரிசையில் நிற்பதைக் காணமுடிந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிற்கும், இஸ்ரேலுக்கு எதிராகவும் சுலோகங்களைத் தாங்கியவாறு ஆறு இஸ்லாமியக் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.



பிஜீங்கில் நடைபெறவுள்ள ஆறு நாடுகளிற்கிடையிலான அணுவாயுதப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக விடுதி ஒன்றிற்குச் செல்லும் ஜப்பானிய பேச்சுவார்த்தையாளர் கெனிச்சிறோசசே.

# லண்டன் குண்டுத் தாக்குதல்கள் அல்-ஹைறதா உரிமை கோரியது

(லண்டன்)

லண்டனில் யூலை மாதம் ஏழாம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஈடுபட்டது தமது அமைப்புத்தான் என்றுஅல்-ஹைறதாவின் துணைத்தலைவர் கூறியுள்ளார்.

அரேபிய தொலைக்காட்சியான அல்ஜசீராவிற்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

52 பேர் உயிரிழந்த இத்தாக்குதலுக்கு முதல்முறையாக இந்த அமைப்பு நேரடியாக பொறுப்பேற்றுள்ளது.

இஸ்லாமிய நாடுகளுக்கு எதிராக பிரிட்டிஷ் அரசின் ஆணவத்திற்கு இது அல்-ஹைறதாவின் பதிலடி என்றும் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் பாராளுமன்றத்திற்கு தேர்தல் நடத்தியது, பாகிஸ்தானில் மதப்பள்ளிகளை மூட அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுத்தது அமெரிக்காவுடன், பாகிஸ்தான் நெருங்கிய உறவு வைத்திருப்பதையும் அவர் விமர்சனம் செய்தார்.


## நேபாளத்திற்கு இந்தியா நிதியுதவி

மேற்கு நேபாளத்திலுள்ள தூர்குஷ் கல்வி வளாகத்தில் 24 வகுப்பறைகளும் நூலக மொன்றும் கட்டுவதற்காக இந்தியா இரண்டு கோடியே 90 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

தற்போது இக்கல்லூரியில் சேர்ந்துள்ள மூவாயிரம் மாணவர்கள் இதன் மூலம் பயனடையவுள்ளனர்.

# வடகொரியாவின் யோசனைக்கு கொபிஅனான் பாராட்டு தெரிவிப்பு

(ஜனிவா)



பாதுகாப்பு உத்தரவாதமும் பலதுறைகளில் உதவிகளும் அளிக்கப்படும் பட்சத்தில் அணுவாயுதத் திட்டதைக்கைவிடுவதாக வடகொரியா அறிவித்திருப்பதை ஐ.நா.தலைமைச் செயலர்கொபி அனான் வரவேற்றுள்ளார்.

வடகொரியாவிற்கும் சீனா, ஜப்பான், அமெரிக்கா, ரஷ்யா, தென்கொரியாவிற்கிடையே பீஜிங்கில் முடிவடைந்த ஒருவார கால பேச்சுவார்த்தையின் போது எட்டப்பட்ட ஒப்பந்தத்தில் வடகொரியா இந்த உறுதி மொழியை அறிவித்துள்ளது.

ஆனால் இந்த ஆயுதங்களை விற்கும் முன்பாக அமெரிக்கா மேற்குலக நீர் அணுசக்தி உலைகளை பியாங் கொங்கிற்கு வழங்கல் செய்ய வேண்டும் என்று வடகொரியா வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறியுள்ளார்.

## விண்வெளி வீரர்களுடனான விண்கலம் ஒன்றை சந்திரனுக்கு அனுப்ப நாசா திட்டம்

விண்வெளி வீரர்களுடனான விண்ணகலம் ஒன்றை சந்திரனுக்கு அனுப்புவதற்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா திட்டமிட்டுள்ளது.

104 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இதனை அனுப்ப திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் நான்கு விண்வெளிவீரர்களை சந்திரனில் ஏழு நாட்களுக்கு தங்க வைப்பதற்கு உத்தேசித்துள்ளதாகவும் நாசா தெரிவித்துள்ளது.

நவீன விண்வெளி தொழில் நுட்பங்களை இதில் பயன்படுத்துவதற்கும் இதற்குமுன்னர் சந்திரனில் தரையிறக்கப்பட்ட அப்பலோ விண்ணகலத்திற்கு சமமான ஒரு விண்கலத்தை அனுப்புவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எண்ணெய் விலை தொடர்ந்தும் உயர்வு

ஒபெக் நாடுகளின் கூட்டம் நடைபெறவிருக்கும் நிலையில் ஆசியாவில் எண்ணெய் விலை பீப்பா ஒன்றிற்கு 68 டொலரை கடந்த நிலையிலுள்ளது.

அமெரிக்காவில் எண்ணெய் தயாரிக்கும் வளைகுடாக் கடற்கரைப்பகுதியில் மீண்டும் புயல் ஏற்படும் அச்சுறுத்தலையடுத்து எண்ணெய் விலைகள் மேலும் உயரும் என்று விற்பனையாளர்கள் எண்ணுகின்றனர்.



அமெரிக்கசனாதிபதி புஷ்,ரஷ்ய சனாதிபதி புட்டினும் வெள்ளை மாளிகையில் பேச்சுவார்த்தை ஒன்றிற்காக நடந்துசெல்கின்றனர்.

## தமிழக சட்டப் பேரவையின் மழைக்கால கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையின் மழைக்காலக் கூட்டத் தொடர் இன்று தொடங்கவுள்ளது.

குறுகிய கால கூட்டத்தொடர் என்பதால் இது ஒருவாரம் அல்லது பத்து நாட்கள் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் நடைபெற விருப்பதையடுத்து உறுப்பினர்கள் தங்கள் வியூகங்களை அமைக்கும் வகையில் இந்தக் கூட்டத் தொடர் அமையும் என்பதால் விறுவிறுப்பான வாக்குவாதங்கள் இக் கூட்டத் தொடரில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழிற் கல்லூரி நுழைவுத் தேர்வு இரத்து பிளஸ் - டு இங்கிரிமன் தேர்வு முறை ரத்து தொடர்பான மசோதாக்களும், காவிரிப் பிரச்சினை, சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் பெறுவது போன்ற விடயங்கள் குறித்து விவாதங்களும் இக் கூட்டத் தொடரில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தமிழக அரசு தொடர்ந்து சலுகைகளையும் புதிய திட்டங்களையும் அறிவித்து வருவது பற்றிய பிரச்சினையை எதிர்க்கட்சிகள் எழுப்பக்கூடும் என்று தெரிவிக்கின்றது. இருப்பினும் இந்த அறிவிப்புகளால் மக்கள் பயனடைந்து வருவதால் இந்தப் பிரச்சினையை எழுப்பாமல் விட்டுவிடக் கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஐ.நா.சபையை விரிவுபடுத்த வேண்டும் இந்தியா மீண்டும் வலியுறுத்தல்

(வோஷிங்டன்)

ஐ.நா. பாதுகாப்பு சபையினை விரிவுபடுத்த வேண்டியது அவசியமென்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. சபையில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில், இந்தியா, ஜேர்மனி, ஜப்பான் மற்றும் பிரேசில் அடங்கிய ஜீ நான்கு நாடுகள் குழு ஐ.நா. சீரமைப்புத் தொடர்பாக சமர்ப்பித்திருந்த வரைபு தீர்மானம் நிராகரிக்கப்படக்கூடாது என்றார். ஐ.நா.சபையின் அதிகார அமைப்பில் குறைபாடுகள் காணப்பட்டதாகக் குறிப்பிட்ட நட்வர்சிங் ஐ.நா. பாதுகாப்புச்சபை சனநாயகரீதியில் செயற்பட நடவடிக்கை எடுக்காமல் உலக நாடுகளின் சனநாயகத்தைக் கொண்டுவர வேண்டும் என்று வாதிட முடியாது என்றார். ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உறுப்பினராவது என்பது ஒரு நாட்டிற்குக் கௌரவம் அதிகாரம் பற்றியது அல்ல. ஆனால் உலக நாடுகளிடையே அதிகாரத்தை பரவலாக்குவதாகும் என்று நட்வர்சிங் தெளிவுபடுத்தினார்.

## ஐ.நா. தலைமையகத்தில் திடீர் மின்வெட்டு

நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. தலைமையகத்தில் நேற்று ஏற்பட்ட மின்வெட்டினால் அங்குள்ள விளக்குகள், தொலைபேசிகள், லிப்ற் என்பன இயங்காதமையினால் தலைமையகத்தில் நடத்த திட்டமிட்டிருந்த ஐ. நா. கூட்டங்கள் நடைபெறவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. தலைமையகத்தில் 28 ஆவது மாடியில் அமைந்த மின்சார கட்டுப்பாட்டு அறையில் தீ ஏற்பட்டதையடுத்து மேல் மாடியிலிருந்த நூற்றுக்கணக்கான ஊழியர்கள் அங்கிருந்து அகற்றப்பட்டதாக ஐ.நா. செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

# வவுனியா பிரகடனத்திற்கு வலுச்சேர்க்க அவுஸ்திரேலியாவில் ஒன்று கூடல்

**தமிழர் இறைமை மற்றும் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தும் வவுனியா பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் ஒன்று கூடல் நிகழ்வு அவுஸ்திரேலியாவில் வரும் இரண்டாம் திகதி நடைபெறவுள்ளது.**

இது தொடர்பாக தென் துருவ தமிழ்ச்சங்கங்களின் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; அன்புக்குரிய தமிழ் மக்களே.

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றிற்கான எமது மக்களின் நீண்ட போராட்டம் இன்று ஒரு முக்கிய திருப்பு முனையில் உள்ளதை நீங்கள் அறிவீர்கள்.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் நடந்த சம்பவங்கள் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஒரு அரசியல் தீர்வைக் காணும் ஆர்வம் சிங்கள ஆட்சியாளர்களுக்கு இல்லை என்பதை தெளிவாக்கியுள்ளது.

சிங்கள ஆட்சியாளர்கள் மேல் எல்லா நம்பிக்கைகளையும் இழந்த நிலையில் எம்மக்கள் தமது சுதந்திர வாழ்விற்கும் சர்வதேச சமூகத்தின் ஆதரவை வேண்டி நிற்கின்றனர்.

சுயநிர்ணயத்தின் மூலம் சுதந்திரமாக சமாதானமாக வாழும் அடிப்படை வாழ்வுரிமைக்காக யூலை-27,2005 இல் சர்வதேச சமூகத்திடம் அவர்கள் அறைகூவல் விடுத்துள்ளனர். யூலை, 2005 இல் வவுனியாவில் தமிழ்ச்சங்கத்தின் கல்விமான்கள், மதத் தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், சமூக அமைப்புக்கள் தொழிற்சங்கங்கள் என்போரை உள்ளடக்கிய பேராளர்கள் மாநாட்டில் இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

அவுஸ்திரேலிய அரசின் ஆதரவை இப் பிரகடனத்தின் பால் ஈர்க்கும் தார்மீகப் பணி புலம்பெயர்ந்த எம்மை சார்ந்ததாகும். இத்தோடு சமாதான முனைப்புக்களுக்கு அனுசரணையாக உள்ளோரும் (அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம், யப்பான்) சர்வதேச சமூகத்தின் கொடு முடியாக விளங்கும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பாதுகாப்புச் சபையும் அண்மையில் வெளியிட்ட அறிக்கைகளுக்கு அவுஸ்திரேலிய அரசின் ஆதரவைப் பெறுவது எமது கடமையாகும்.

யூலை-19 இல் சமாதான முன்னெடுப்புக்களுக்கு அனுசரணையாக இருப்போர் (அமெரிக்க ஐரோப்பிய ஒன்றியம், யப்பான்)வடக்கு கிழக்கில் இயங்கும் பல்வேறு ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என வேண்டியுள்ளதையும், ஒகஸ்ட் 16 இல் ஐ.நா பாதுகாப்புச் சபை சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப்புலிகளுக் கும் இடையேயான யுத்த நிறுத்த உடன்படிக்கை முற்றாக அமுல்படுத்தப்பட வேண்டும் என வேண்டியுள்ளதையும் அவுஸ்திரேலிய அரசின் கவனத்திற்கும் ஆதரவிற்கும் கொண்டு வர ஒன்று திரள்வோம்.

இந்த ஒன்று கூடலில் நாம் பெருந்தொகையாக கலந்து கொள்வதன் மூலம் எமது பாராளுமன்ற உறுப்பினர்க்கும் சக அவுஸ்திரேலியருக்கும் எமது மக்களின் வவுனியாப் பிரகடனத்தை நாம் முற்றாக ஆதரிக்கின்றோம் என்பதைத் தெரியப்படுத்தி அதற்கு அவர்களது ஆதரவைப் பெறமுடியும்.

இசையும் நாட்டியமும் இந்த ஒன்று கூடலிற்கு மெருகூட்டும். குடும்பத்துடன் சமூகம் தந்து எமது வரலாற்றுப் பணியை செய்வோம் வாரீர் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# உள்ளூர் வீதிகள் புனரமைக்கும் பணி ஆரம்பம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட கோவில் குடியிருப்பு கிராம மக்களுக்கான உள்ளூர் வீதிகள் புனரமைக்கும் பணியின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு தற்காலிக குடியிருப்புத் தலைவர் மோகன் தலைமையில் ஆரம்பமானது.

இதில் அந்தக் கிராம மக்களை ஈடுபடுத்துவதே மிக முக்கிய நோக்கம் எனவும் அவர்களுக்கான கொடுப்பனவும் வழங்கப்பட்டவுள்ளதாகவும் வேள்ட்விசன் நிறுவன வேலைத் திட்ட பிரதேச இணைப்பாளர்களான விக்கினேஸ்வரன், விஜயகுமார் ஆகியோர் தெரிவித்தனர்.

இந்த வீதிப் புனரமைப்பமைப்பில் மக்கள் பெரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர். (20)



துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பின் தங்கிய கிராமமான தேறாங்கண்டல் பகுதியில் கலைமகள் சிறுவர் பூங்காவில் சிறுவர் பராமரிப்பு நிலைய புதிய கட்டட நிர்மான வேலைகள் நடைபெற்று வருகிறது. (படம். அன்ரனி)

## கூட்டுறவுச் சபை கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச் சபைக்கான கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஒட்டுசுட்டானில் நடைபெற்றது.

முல்லை. மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் இ.மரியதாசன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் அடிக்கல்லினை முல்லை. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி. மோ.சிவமயம், ஒட்டுசுட்டான் ப.நோ.கூ. சங்க உபதலைவர் ஆ.றஞ்சித குமார், சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் ந.சிவதாஸ், ஒட்டுசுட்டான் ப.தெ.வ.அ.கூ சங்க பொதுமுகாமையாளர் பால்ராஜ் ஆகியோர் நாட்டினார்கள்.

இந்த நிகழ்வில் பொதுமுகாமையாளர்கள், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள்எனப் பலர் கலந்து கொண்டனர்.

## சிறுவர் கலை விழா

(முழங்காவில்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணி நிர்வகிக்கும் முழங்காவில் இரணை மாதாநகர் சொக்கலிங்கம் சிறுவர் பூங்காவின் சிறுவர் கலை நிகழ்வு நாளை இடம்பெறவுள்ளது. சிறுவர் பூங்கா கலை அரங்கில் மாலை 6.00 மணிக்கு இந் நிகழ்வு இடம்பெறவுள்ளது

# சர்வதேச ஆசிரிய தினம் ஒக்ரோபர்-5 இல் சுகவீன வேலை நிறுத்தப் போராட்டம்

**-இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழு அறிவிப்பு**

இருபத்திமூன்று கோரிக்கைகளை முன் வைத்து தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

சர்வதேச ஆசிரிய தினமான ஒக்ரோபர் மாதம் 05 ஆம் திகதி அடையாள தொழிற்சங்க நடவடிக்கையாக ஒரு நாள் சுகவீன வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் இக் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் ஒக்ரோபர் 24 ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியான வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழு முடிவு செய்திருப்பதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் அறிக்கை யொன்றில் தெரிவித்திருக்கின்றார்.

தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றுக்கு சங்க உறுப்பினர்களைத் தயார் நிலையில் வைத்திருக்குமாறு தாய்ச்சங்க மாவட்ட வலய மற்றும் கிளைச் சங்கங்கள் ஆகியவற்றின் நிர்வாகிகளை பொதுச் செயலாளர் கேட்டுள்ளார். முக்கிய கோரிக்கைகள் சில வருமாறு.

தமிழ் மொழி மூல கல்வி அபிவிருத்திகளில் தேசிய கல்வி நிறுவகமும் கல்வி வெளியீட்டுத் திணைக்களமும் பாகுபாடு காட்டுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக இவற்றின் கிளைகளை வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பாடசாலைகள் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று பிரிக்கப்பட்டுள்ளதால் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை, இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவை ஆகியவற்றின் பிரமாணக் குறிப்புக்களில் ஆளணி, இன ரீதியாகக் குறிப்பிட்டு அதற்கேற்ப ஆள் திரட்டல் நடைபெறவேண்டும்.

திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தின் வளாகம் திருகோணமலை பல்கலைக்கழகமாகவும், வவுனியாவில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக வளாகம் வன்னிப் பல்கலைக்கழகமாகவும் தரம் உயர்த்தப்பட வேண்டும்.

பாடசாலைகளிலிருந்து 50 மீற்றர் தூரத்திற்குள் அமைந்துள்ள ஆயுதப் படையினரின் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட வேண்டும். படையினரின் நடமாட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

ஆங்கில ஆசிரியர்களை உருவாக்கும் கல்வியற்கல்லூரி மன்னாரில் நிறுவப்பட வேண்டும்.

கிளிநொச்சியில் அக்கராயன் குளம் மகாவித்தியாலயத்தில் இயங்கும் ஆசிரிய மத்திய நிலையம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையாக மாற்றப்பட வேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடிக்குடியமர அனுமதிப்பதுடன் அப் பகுதியிலுள்ள பாடசாலைகளை கல்வித் திணைக்களத்திடம் மீளவும் கையளித்து கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (25)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மீன் வியாபாரிகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈருருளிகள் வழங்கல்

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்றுவதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அளப்பரிய சேவைகளைச் செய்து வருகின்றது. அந்த வகையில் அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்று முன்தினம் 10.30 மணியளவில் அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் வைத்து ஈருருளிகளை முஸ்லிம் மீன் வியாபாரிகளுக்கு வழங்கியுள்ளன.

இவ் வியாபாரிகள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நிகழ்ந்த சுனாமிப் பேரலையால் தங்களது ஈருருளிகளை இழந்திருந்ததையடுத்து இன்று வரை தங்களது வியாபாரத்தை மீளவும் மேற்கொள்ள முடியாமல் அன்றாட வாழ்வியல் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாதளவில் வாழ்ந்து கொண்டிருந்தனர். இவர்களது இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் இவர்களுக்கு ஈருருளிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 'மீண்டும் கடலை நோக்கி' என்னும் செயற்றிட்டத்தின் கீழ் அதன் பணிப்பாளர் தினேஸ், வாகனப் பொறுப்பாளர் குருநாதப் பிள்ளை ஆகியோர் வழங்கியிருந்தனர்.

## புனரமைக்கப்பட்ட அன்பு இல்லக் கட்டடம் கையளிக்கும் நிகழ்வு

திருகோணமலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் "மல்டஸர் இன்ரநெஷனல்" நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்ட அன்பு இல்லக் கட்டடம் கையளிக்கும் வைபவம் கடந்த சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்பு சிறுவர் இல்லத் தலைவியும், ஆசிரியருமான திருமதி. சித்திதேவி தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக "மல்டஸர் இன்ரநெஷனல்" நிறுவனத்தில் இணைப்பாளர் மெரின்பிரஸ் கலந்து கொண்ட இந் நிகழ்வில் வரவேற்புரையை திருமதி. சித்திதேவி நிகழ்த்தினார். திருகோணமலை மாவட்டப் பிரதிப் பணிப்பாளர் குமரகுருபரன், திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம், திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் விஜயகுமார், சிறுவர் நன்னடத்தை அதிகாரி நந்தசாமி, திருகோணமலை தொண்டர் நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் தவலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். திருகோணமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்,மதப் பெரியார்கள் சிறுவர் நல உத்தியோகத்தர்கள், நலன் விரும்பிகள் போன்றோர் கலந்து கொண்டனர்.

## தியாகி லெப். கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு துணுக்காய் அ.த.க பாடசாலையில் உண்ணா நோன்பு

(துணுக்காய்)

துணுக்காய் அ.த.க பாடசாலையில் தியாக தீபம் லெப்டினன் கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டின் ஐந்தாம் அம் நாள் அடையாள உண்ணா நோன்பு நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை மாணவன் கிருஸ்ணகுமணன் தலைமையில் ஆரம்பமானது.

இந் நிகழ்வில் பொதுச்சுடரினை பாடசாலை அதிபர் தில்லைநாதன் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை கொள்கை முன்னெடுப்புப் போராளி உலக நெஞ்சன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து தியாக தீபம் திலீபனின் திரு வுருவப்படத்துக்கான ஈகச்சுடரினை ஆலங்குளம் மாவீரர்துயிலுமில்லப் பொறுப்பாளர் செல்வி சசி ஏற்றி வைத்தார்.

திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை பாடசாலை உப அதிபர் திருமதி பரமானந்தராஜா அணிவித்தார். அதனைத் தொடர்ந்து தலைமையுரை நடைபெற்றது. பாடசாலை மாணவர்களின் திலீபன் தொடர்பான கவிதைகள் மற்றும் நினைவுரைகள் என்பன இடம் பெற்றது. அரசியல்துறைப் போராளி புரட்சி நிலவன் ஆற்றினார்.

இதில் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பொது அமைப்புக்கள் பொது மக்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வட்டக்கச்சி பிரதேச விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேச விவசாயிகளுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் நேற்று முன்தினம் விவசாய உள்ளீடுகளை வழங்கியுள்ளது.

வட்டக்கச்சி பகுதியில் 75 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு விவசாயிக்கும் தலா 7,000.00 ரூபாய் பெறுமதியான உரம், நெல் என்பன வழங்கப்பட்டன.

ஒரு விவசாயிக்கு இரண்டு அந்தர் பசளைகளை இரண்டு அந்தர் யூரியா, இரண்டு அந்தர் T.M, 80 மு.பு விதை நெல் என்பன வழங்கப்பட்டன. அடுத்த கட்டமாக ஏனைய விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (12)

# தமிழர்களிடம் ராஜபக்ஷ ஆதரவு கோருவது கேலிக்கிடமான விடயம்; கபட நாடகம்

## - தமிழ் அரசஉத்தியோகத்தர்பலரும் விசனம்

(யாழ்ப்பாணம்)

**தமிழர்களுக்கெதிராக இனவாதம் பேசிவரும் சிறிலங்கா பிரதமரும் சனாதிபதி வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தனக்கு வாக்களிக்குமாறு தமிழ் அரச உத்தியோகத்தரிடம் கோருவது கேலிக்கிடமானது.இது ஒரு கபட நாடகம் என தமிழ் அரச உத்தியோகத்தர்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அரச உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட முறையில் கடிதங்களை அனுப்பி வருகிறார்.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனக்கு வாக்களித்து ஆதரவுதெரிவிக்குமாறு கோரியே இக் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

எதிர்வரும் தேர்தல்மூலம் தான் சனாதிபதிப் பதவிக்கு வந்தால் அரச உத்தியோகத்தர்களுக்குஅதிக பட்ச சலுகைகளைச்செய்வேன் என்ற விடயத்தையும் இக்கடிதங்களில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷமேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைகள் குறித்து விசனம் தெரிவித்துவரும் யாழ்.குடாநாட்டு அரச உத்தியோகத்தர்கள் தற்போது பிரதமராக இருக்கும் காலத்தில் இனவாதிகளுடன் இணைந்து தமிழர்களது அபிலாஷைகளுக்கு எதிராக செயற்படும் இவர், சனாதிபதியாக பதவி வகித்தால் தமிழ்மக்களின் நிலைமை மேலும் மோசமாகும். சலுகைகளைக்காட்டி தமிழ்மக்களது வாக்கு வங்கிகளை சுவீகரித்துக்கொள்ள முயல்வது இவரின் வெறும் அரசியல் நாடகமே என்றும் அவர்கள் சுட்டிக்காட்டி ஆட்சேபம் தெரிவிக்கின்றனர். (33)

# தொண்டர் அமைப்புக்கள் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கவும்

## -யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்- மாவட்டத்தில் அபிவிருத்தி புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் தொண்டர் அமைப்புக்கள் தமது செயற்பாடுகளை ஒருங்கிணைத்து செயற்படுத்த வேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். அரச செயலகத்தில் யாழ். குடாநாட்டில் அபிவிருத்திப்புனர்வாழ்வு பணிகளில் ஈடுபட்டுவரும் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு தொண்டர் அமைப்புக்களும் அபிவிருத்தி புனர்வாழ்வுப்பணிகளை முன்னெடுத்து வருகின்றன. எனினும்இவற்றின் செயற்பாடுகள் குறித்து பொதுமக்கள் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன் தொண்டர் அமைப்புகளின் திட்ட அமுலாக்கம் பற்றி விளக்கமளிக்கப்படுவதில்லை என்றும் பொதுமக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில் தொண்டர் அமைப்புக்கள் மேற்கொள்ளும் அபிவிருத்திப் புனர்வாழ்வுப்பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுவதுடன் அத்திட்ட அமுலாக்கல்பற்றி மக்களுக்கு விளக்கப்படவேண்டும் என்றும் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் அவர் தெரிவித்தார். (33)

# கண்காட்சி

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள மாதர் அபிவிருத்தி நிலையங்களின் உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்தும் மாகாண மட்டத்திலான கண்காட்சி ஒன்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் இக்கண்காட்சி யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 23 ஆம் திகதி காலை ஒன்பது மணிக்கு நடைபெறவுள்ள இக்கண்காட்சியின் ஆரம்ப வைபவத்தில் பிரதம அதிதிகளாக யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் மற்றும் வடக்கு கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் சி.ரங்கராஜா ஆகியோரும் சிறப்பு விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் கி.பத்மநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (33)

# திலீபன் நினைவுத் தூபியில் இருந்து பொங்கு தமிழ் பரப்புரை ஆரம்பம்

(நல்லூர்)

யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி மாணவர்கள் பொங்கு தமிழ் நிகழ்விற்கான பரப்புரையை நேற்று காலை தியாகி திலீபன் நினைவுத்தூபியிலிருந்துஆரம்பித்துள்ளார்கள்.காலையில் நினைவுத்தூபியில் மலரஞ்சலி செலுத்தி இவர்கள் தமது பரப்புரைகளை ஆரம்பித்தனர்.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் சொலமன் சூ.சிறில் ஆசியுரைவழங்கி ஆரம்பித்துவைத்தார்.

நேற்றைய பரப்புரையில் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (41)

# உந்துருளிகள் விபத்து;2 பேர் காயம்

உந்துருளிகள் இரண்டு நேருக்கு நேர் மோதிக்கொண்டதில்இருவர் படுகாயமுற்றநிலையில் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.நேற்றுமுன்தினம் மதியம் 1.00 மணியளவில் பருத்தித்துறை சாரையடிப் பகுதியில் இரு உந்துருளியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் உடுப்பிட்டியைச் சேர்ந்த காசிப்பிள்ளை வாகீசன் (வயது-45) இரண்டாம் குறுக்குத்தெருபருத்தித்துறையைச் சேர்ந்த ஹாட்லிக் கல்லூரியின் 2006 வர்த்தகப்பிரிவு மாணவன் எஸ். சிந்துஜன் ஆகியோரே படுகாயமுற்றனர். இதில் வாகீசன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் .(கா)

# பிரதேச செயலகங்களுடாக பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள்

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் இனிமேல் அந்தந்தப்பகுதியில் அமைந்துள்ள பிரதேச செயலகங்களுக்கு ஊடாக பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்று பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதுவரைகாலமும் யாழ்.செயலகமூடாக வழங்கப்பட்டு வந்த பிறப்பு, இறப்புஅத்தாட்சிப் பத்திரங்களை அந்தந்தப்பகுதியிலுள்ள பிரதேச செயலக பிரிவுகளில் தொடர்பு கொண்டு மக்கள் பெற்றுக் கொள்ளுவதற்கான நடைமுறைகள் எடுக்கப்பட்டு இருப்பதாகவும், பிறப்புஅல்லது இறப்பு எந்தப் பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குள் நிகழ்ந்ததோ உடனடியாக அந்தப் பிரதேச செயலகத்தில் விண்ணப்பம் செய்வதன் மூலம் குறைந்த காலத்தில் அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (28)

# பாடசாலைகளை மீளக் கட்டியெழுப்ப அரசு ஒத்துழைப்பு இல்லையென குற்றச்சாட்டு

சுனாமி கடல்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கரையோரப் பாடசாலைகளை மீளக்கட்டியெழுப்பும் விடயங்களில் அரசு போதிய ஒத்துழைப்பினை வழங்காமையில் கற்றல் செயற்பாடுகள் மிகவும் மந்த கதியிலேயே முன்னெடுக்கப்படுவதாக கல்விச்சமூகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

குறிப்பாக சுனாமி அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடமராட்சியின் கரையோரப்பாடசாலைகளில் ஒரு பகுதி பாடசாலைகள்,கரையோரத்திலிருந்து 300 மீற்றர் தூர பகுதியினுள் அமைந்திருந்தமையால் அவற்றை நகர்த்தி பாதுகாப்பான இடங்களில் நிறுவுவதென முடிவு செய்யப்பட்டிருந்தது. இதற்கென புதிய இடங்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு எட்டு மாதங்களைக் கடந்துவிட்ட போதும் இப் பகுதிகளில் தற்காலிக கொட்டகைகளை அமைத்து கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் பணி முழுமைபெற்றிருக்கவில்லை.

குறிப்பாக புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளிற்கு தற்காலிக கொட்டகைகளை எடுத்துச்செல்வதற்கான படையினரின் கெடுபிடிகளால், அப்பணி பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

எனினும் பல்வேறு சர்வதேச தொண்டர்அமைப்புக்களும் நிரந்தர பாடசாலைக் கட்டிடங்களை கட்டி வழங்குவதாக உறுதி கூறியுள்ளபோதும் அங்கு சொல்லிக்கொள்ளத்தக்க அளவில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

குறிப்பாக இலங்கை அரசு பிரச்சாரம் செய்வது போல் இப்பாடசாலைகளில் கல்வி மேம்பாட்டிற்கு எதுவுமே கிட்டியிருக்கவில்லையென்பதை கல்விசார்ந்த அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர். (27)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் வாய்ப்புற்று நோய் ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்- மாவட்டத்தில் வாய்ப்புற்று நோய் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. என்று யாழ்.போதனாவைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைநிபுணர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

இலங்கையில் வாய்ப்புற்று நோயின் தாக்கம் அதிகமாக உள்ளது.இதனால் இத்தகைய வாய்ப்புற்று நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக புற்று நோய்த் தாக்கம் பற்றிய ஆய்வுகள் சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அந்த அடிப்படையில் யாழ். மாவட்டத்திலும் வாய்ப்புற்று நோய் தாக்கங்கள் பற்றிய ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன.இந்த ஆய்வு நடவடிக்கைகள் தென்மராட்சிப் பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன. முதற்கட்ட ஆய்வுகள் 50 வயதுக்கு மேற்பட்டவர்களிடம் இருந்து செய்யப்படும்.இதற்காக சுகாதார பரிசோதகர்களுக்கும் சுகாதார தொண்டர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் கூறினார் (33)

# விண்ணப்பிக்கலாம்

கரணவாய் வேதாரணியேஸ்வரர் வித்தியாலயத்தின் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக தமது விண்ணப்பங்களை வடமராட்சி வலயக்கல்விப்பணிமனையில் சமர்ப்பிக்கலாம் என வலயக்கல்விப்பணிப்பாளர் செல்வராஜா அறிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர்சேவை தரம்1 தரம் 1-2 அல்லது இலங்கை அதிபர் சேவை ஆகியதரங்களை சேர்ந்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது .(33)

# பொங்கு தமிழில் அணி திரள வேண்டியது காலத்தின் கட்டாய தேவை; வரலாற்றுக் கடமை

## - தென்மராட்சி பொங்கு தமிழ் செயலணிக்குழு

(தென்மராட்சி)

நாம் எல்லோரும் பொங்கு தமிழ் நிகழ்வில் தவறாது ஒன்று திரள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். இந்த வரலாற்றுக் கடமையினை நிறைவேற்ற நாம் எமது வழமையான பணிகள் அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டுஒன்று கூடி எமது சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுப்பதன் மூலமே எமது இனத்தின் விடிவுக்கும் சந்ததியின் வாழ்விற்கும் வழி ஏற்படுத்தலாம் என தென்மராட்சி பொங்குதமிழ் செயலணிக்குழு தெரிவித்துள்ளது.

பொங்கு தமிழ்- 2005 தொடர்பாக செயலணிக்குழு விடுத்துள்ள அறிவிப்பில்:-

சிங்கள தேசத்தின் உண்மை சொரூபம் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடனும் ஜாதிக ஹெல உறுமயவுடனும் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் மூலம் மீண்டும் ஒரு முறை அரங்கேறியுள்ளது. இனிவரும் காலத்தில் சிங்கள தேசத்தால் தமிழ் மக்களுக்கு என்ன நடக்கப் போகிறது என்பதை அது கட்டியம் கூறி நிற்கின்றதல்லவா?

இந் நிலையில் தமிழ் மக்களாகிய எமக்குள்ள தெரிவு தான் என்ன? நாம் செய்ய வேண்டியது என்ன? பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் தியாகத்தாலும், பொது மக்களின் அர்ப்பணிப்புக்களாலும், போராளிகளின் உதிரத்தாலும் தீர்க்கதரிசனமான தலைமைத்துவத்தாலும், எமக்கென்று ஒரு நடைமுறை அரசை நாம் நிறுவியுள்ளோம். ஓர் அரசுக்கான முப்படைகள், காவல்துறை என்பனவற்றுடன் பொருளாதார, சமூக, நிர்வாகக் கட்டமைப்புக்களைக் கொண்ட தமிழர் அரசு எமது தாயகத்தில் நடைமுறையில் உள்ளது.

இந்த நிலையில் வவுனியா தேசிய எழுச்சி மாநாட்டின் பிரகடனத்தின் மூலம் எமது நீதியான போராட்டத்தையும், சுயநிர்ணய உரிமையினையும் அங்கீகரிக்குமாறு சர்வதேசத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்தத் தேசிய எழுச்சிப் பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக தமிழர் தாயகத்தில் நடைபெற்று வரும் நிகழ்வுகளின் வரிசையில் மற்றொரு சிகரமாக குடாநாட்டு மக்களின் விருப்பால் எதிர்வரும் 30 ஆம் திகதி பொங்குதமிழ் எழுச்சி பிரகடன நிகழ்வு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# தமிழ்மக்களின் ஆழமான அபிலாசையை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைப்போம்

## -பொங்குதமிழ் ஏற்பாட்டு நிகழ்வில் பா.உ.பத்மினி

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் தமது அடி மனதில் தாங்கியிருக்கும்அபிலாஷைகளை உலகிற்கு எடுத்துரைக்கும் விடயம்தான் இந்தப்பொங்கு தமிழ்.இது 2001 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரால் முதன் முதல்முன்னெடுக்கப்பட்டது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்தார். ,.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற பொங்கு தமிழ்-2005 பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் பெண் செயலாளிகளின் ஆயத்த அரங்கு நிகழ்வில்கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முதலாவது பொங்கு தமிழ் நடைபெற்ற காலம் ஒரு இராணுவ இரும்புப்பொறிக் காலம்அப்பொழுது அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இருந்தது .பாதுகாப் பற்ற கெடுபிடியான சூழ்நிலை தலை விரித்தாடியது.ஆயினும் மக்களைத் திரட்டி அநாவசியமான இழப்புக்களைச் சந்திக்க விரும்பாத பல்கலைக்கழக மாணவர் தாமாகவே அந்தப் பொங்கு தமிழ் நிகழ்வினை நடத்திமுடிந்தார்கள்.அத்தகையகெடுபிடிக்கு மத்தியில்அப் பொங்கு தமிழ் நிகழ்வு வெற்றிகரமாக நடந்து சர்வதேசத்தில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியிருந்தது.

தற்போது தென்னிலங்கையில் சனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தவேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன தேர்தலில் வெற்றி பெறும் சனாதிபதி ஒற்றையாட்சி மூலமே தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் என்று ஜே.வி.பி.அடம்பிடித்து நிற்கின்றது.

இது இவ்வாறிருக்க யுத்த நிறுத்தம் ஏற்பட்டுகடந்த மூன்றரை ஆண்டுகளில் தமிழ்மக்களின் அபிலாஷைகள் எவையுமே நிறைவேற்றப்படவில்லை.இணைந்து வாழ்வோம் என்றால் பேரினவாதம் அதற்கு விரும்பவில்லை.பேச்சுக்கள் மூலம் தீர்வு காணவும் அது விரும்பவில்லை இந்நிலையில் எமது சுதந்திரமான-சுபீட்சமான- சுயநிர்ணயமான வாழ்க்கையை சர்வதேச சமூகம்தான் அங்கீகரிக்க வேண்டுமெனக்கோரி எதிர்வரும் பொங்கு தமிழ் நிகழ்வில் பல இலட்சம் பேர் திரண்டு சர்வதேசதத்திற்கு தெரிவிப்போம் என அவர்தெரிவித்தார். (27,37)

# ஓயாத அலைகள்-02 கிளிநொச்சி மீட்பு நடந்ததெவ்வாறு?

சிறிலங்கா இராணுவத்தின் 54ஆவது டிவிசனின் 3ஆவது படைப்பிரிவு, பிரிகேடியர் உபாலி எதிரிசிங்கவின் தலைமையில் கிளிநொச்சிப்பகுதியை 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் தமது ஆக்கிரமிப்புக்குள்ளாக்கி யிருந்தது.


1996-07-26 அன்று ஆரம்பமான சத்ஜெய எனும் இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளுக்கெதிரான இறுதி யுத்தம் எனக்கூறிக் கொண்டு 70 நாட்கள் மூன்று கட்டங்களாக 12 கிலோமீற்றர் பகுதிக்குள் ஆமைவேகத்தில் முன்னேறி 22.09.1996 அன்று கிளிநொச்சியை ஆக்கிரமித்தன சிறிலங்காப்படைகள்.

இவ் ஆக்கிரமிப்பினால் அன்று ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்தனர். 1279 சதுரகிலோமீற்றர் பரப்பளவைக்கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே ஆனையிறவு, பரந்தன் படைத்தளங்கள் அமைந்திருந்த நிலையில் சத்ஜெய 60சதுர கிலோமீற்றர் நிலத்தை விழுங்கிக்கொண் டது. இந்நடவடிக்கைக்கெதிராக புலிகள் 15 நாட்கள் தான் எதிர்சமரை மேற்கொண்டனர். இதன்போது நாளொன்றுக்கு 3000 எறிகணைகள் என்ற வீதத்தில் புலிகள் மீது எறிகணைகளை ஏவியும், நாளொன்றுக்கு நான்குதடவைகள் இரண்டு கிபிர் விமானங்கள் குண்டுகளை வீசியும் தாக்குதலை நடாத்தியே ஆக்கிரமிப்பை நடத் தின. இதன்போது சிறிலங்காப் படைகள் பயன் படுத்திய எறிகணைகளின் எடைமட்டும் 500 தொன் எனவும் கிபிர் குண்டுகளின் எடை 325தொன் எனவும் மொத்தமாக சத்ஜெயவிற்கு 825 தொன் வெடிபொருட்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் ஆய்வு ஒன்று குறிப்பிடுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மரபுவழிச்சமரை வெற்றிகரமாகக் கையாண்ட சமராக இது அமைவதோடு, 120 மில்லி மீற்றர் மோட்டார் உட்பட பெயர் குறிப்பிடாதபல சுடுகலன்களை விடு தலைப்புலிகள் முதன்முதல் பயன்படுத்திய சமராகவும் இது அமைகிறது. எனினும் புலிகள் தமது ஆட்பலத்தைத் தக்கவைப்பதற்காக தற்காலிக பின்வாங்கல்களையும் மேற்கொள்ள நேர்ந்தது.

இச்சமரில் 700 இற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட 2500இற்கும் மேற்பட்ட படையினர் படுகாயமடைந்திருந்தனர். விடுதலைப்புலிகள் தரப்பில் 254 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

இவ்வாறு ஆக்கிரமித்திருந்த படைகளுக்கு இடிவிழுந்த நாள் 27.09.1998 அன்று தமிழீழ விடுதலைப்புலிகள் பல உயிர்த்தியாகங்களைச் செய்து கிளிநகரை மீட்பதற்கான ஓயாத அலைகள் 02ஐ ஆரம்பித்தனர். இன்று நீரோடும் கால்வாய்கள் அன்று மாவீரரின் குருதி சிந்திக்கிடந்த கால்வாய்களாகக் காணப்பட்டன. இன்று நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் அன்று பல புலி வீரர்களின் உடல்கள் சரிந்த நிலங்களாகக் காணப்பட்டன.



இற்றைக்கு ஏழு வருடங்களுக்கு முன் நடந்த ஓயாத அலைகள் 02 சமர் எவ்வாறு நடைபெற்றதென்பதை அன்றைய சமர்க்களங்களில் எதிரியைப் புறமுதுகிட்டு ஓடச்செய்த வீரர்கள் நினைவுபடுத்துகிறார்கள்.

ஓயாதஅலை 02 சமரின் வெற்றிக்கு வலுச் சேர்த்தவர்களில் எதிரியின் முகாம்களுக்குள் ஊடுருவி தாக்குதலுக்கான தரவுகளையும் உள்ளே எதிரியின் ஒவ்வொரு அசைவையும் அவதானித்த வேவு வீரர்கள் தாம் எவ்வாறு எதிரியின் நிலைகளுக்குள் ஊடுருவினார்கள் என்பதையும், தாக்குதலுக்கான தகவல்களை எவ்வாறு திரட்டினார்கள் என்பதையும் இதுவரை வெளியிடாத தகவல்களை வேவுப்புலி வீரர்கள் ஓயாத அலைகள் 02 இன் 7ஆவது ஆண்டு நினைவுநாளில் பகிர்ந்து கொள்கின்றார்கள். அதில் வெற்றிக்கு வழிவகுத்த அம்சங்களை- பல புதிய தகவல்களை வேவு வீரர்களை நெறிப்படுத்தியவரும் அன்றைய விசேட வேவுப் பிரிவின் தளபதிகளில் ஒருவராகவும் இருந்த லெப்ரினன்ட் கேணல் ஜெரி இவ்வாறு கூறுகிறார்.

"ஓயாத அலை இரண்டுக்கான வேவு நடவடிக்கையை ஆரம்பிக்கும் முன்பே நாங்கள் கிளிநொச்சிப் பகுதியை அண்டிய இராணுவ காவலரண்களைச் சுற்றி ஓரளவு கண்காணிப்பை வைத்திருந்தோம் கிளிநொச்சி முகாமை அடிக்க வேண்டுமென்று எல்லாரும் உறுதியோடு இருந்தோம் ஆனால் எப்போது அடிக்கிறதென்ற திட்டம் எங்களுக்குத்தரப் படவில்லை.

ஓயாத அலை -02 நடவடிக்கைக்கு ஒரு மாதத்திற்குள்தான் இந்த வேவு நடவடிக்கையை வேகப்படுத்தினோம். ஆரம்பத்தில் விசேட வேவுப்பிரிவினர்தான் இதைப் பார்த்தார்கள்.



பகுதி - 1

## ஏழாம் ஆண்டு நிறைவில் ஓயாத அலைகள் -02

சண்டைக்கு அணிகளை இறக்குவதற்கான வேவுக்காக ஒவ்வொரு படையணிகளையும் இந்த வேவு நடவடிக்கையில ஈடுபடுத்தியே இதனை முழுமைப்படுத்தினோம்.

ஆரம்பத்திலே வேவுபார்த்ததற்கும் கடைசிக் கட்டங்களில் வேவுபார்த்ததற்கும் நிறையப் பிரச்சினைகள் இருந்தன. என்னவென்றால் வேறு நடவடிக்கைகளுக்கு வேவுபார்க்கும் போது குறிப் பிட்ட இடத்தில் சிக்கல் என்றால் 100 அல்லது 60 மீற்றர் விலத் தியும் பார்ப்போம். ஆனால் இந்தப் பிரதேசத்தைப் பொறுத்த மட்டில் எங்களுக்கென குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட இடத்தில் பாதை எடுத்து கொடுக்க வேண்டிய தேவை இருந்தது. ஏனென்றால் அந்த இடத்தில் உடைப்பை ஏற்படுத்தினால் மட்டும்தான் இலகுவான முறையில் கைப்பற்ற முடியும் என்ற நிலை இருந்தது. இதே நேரத்தில் எதிரியும் எதிர்பார்க்கக்கூடிய இடத்தில்தான் உடைப்பு பகுதியும் இருந்தது. மூன்று பேரைக் கொண்ட வேவு அணி உட்புகுந்து வேவு பார்க்கமுடியும். ஆனால் பெரும் அணி நகரும் போது எதிரி அவதானிக்காதவாறும் வேவுபார்க்க வேண்டியிருந்தது.

வேவின் ஆரம்பத்தில் சிக்கல் குறைவாக இருந்தாலும் அடுத்தடுத்து வந்த நாட்களில் எல்லாப் பாதைகளிலும் எதிரியின் பதுங்கித் தாக்கும் அணிகளின் அச்சுறுத்தல்கள் அதிக மாக இருந்தது. பகல்வேளைகளிலும் இரவிலும் எதிரி தனது அரணுக்கு வெளியிலும் அவதானிப்பு நடவடிக்கைகளை அதிகப்படுத்தி யிருந்தான். இதற்கும் பின்புதான் நாங்கள் முழுமையான வேவுகளை பார்க்கவேண்டியிருந் தது. அதாவது எமது அணிநகரும் போது அவர் களுக்கு பாதுகாப்பாக மற்றுமொரு அணியை நகர்த்த வேண்டிய நிலையும் ஏற்பட்டது. கூடிய பாதைகளால் அணிகளை நகர்த்துவதற்கான வேவுகளைப் பார்த்து நகர்த்தியதென்பதும் எமக்கு பெரும் வெற்றி என்றே கருதலாம். இதில் எல்லா வேவுப் போராளியும் கடுமையாக உழைத்தார்கள். கடைசிக் கட்டங்களில் இரவு, பகல் முழுமையாக ஓய்வின்றி செயற்பட்டார்கள். ஏனென்றால் சண்டையினுடைய முழுப்பொறுப்பும் வேவு வீரனுக்குரியதாக இருக்கும். உண்மையில் ஒரு வேவுப் போராளி தனது உயிரை மதிக்காமல் கடும் ஆபத்தான பகுதிகளுக்குள் சென்று வருகிறானென்றால் அதன் உண்மையான நோக்கம் தான் உயிரோடு திரும்பினால் அந்தப் பாதையில் ஏனைய போராளிகளின் இழப்புக்களை குறைப்பது தான் வேவுப் போராளியின் நோக்கமாக இருக்கும். வேவில் பிரச்சினைகள் இருந்தால் இழப்புக்கள் கூடும் ஆகவே வேவுப் போராளிகள் சரியாக இதை உணர்ந்து கொண்டுதான் இதில் ஈடுபடுவார்கள் ஒரு சண்டையில் வெற்றியடைந்தால் அதனுடைய ஆரம்ப வெற்றி வேவுவீரனையே சாரும்.

இந்த ஓயாத அலை 02ஐப் பொறுத்தவரையில் முழுப்பாதையாலும் குறித்த நேரத்திற்கு சண்டை தொடங்கி முழுப்பாதைகளையும் உடைத்து அணிகள் உட்புகுந்தன. ஒருபாதையால் 50 பேர் கொண்ட அணி அமைதியாக உள்ளே சென்றுதான் சண்டையில் ஈடுபட்டன.

வேவுப் போராளிகளுக்கு இந்தப்பிரதேசத்தில் அமைந்த சாதகம் என்னவென்றால் நடைதூரம் குறைவாக இருந்தது. இந்த போராளிகளுக்கு வேவின் கடைசிக்கட்டங்களில் ஓய்வு கொடுக்க முடியாதிருந்தது. ஏனென்றால் ஓய்வெடுத்தால் சண்டையில் பெரும் மாற்றம் ஏற்படும் அவர்களும் ஓய்வினை எதிர்பார்க்க மாட்டார்கள். ஏனென்றால் சண்டைக்கு முதல்நாள் நகர்விற்கான பாதையில் சிக்கல் ஏற்பட்டால் மற்றுமொரு பாதையை அவர்தான் எடுக்கவேண்டும் இந்த சண்டையிலும் சண்டைக்கு முதல் நாள் ஒரு பாதையில் குழப்பம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் அந்தபாதைக்குரியவர் அடுத்தநாள் நான்கு மணித்தியாலத்தில் இன்னுமொரு பாதையை எடுத்தார். நகர்வுப்பாதைகளை எடுப்பதிலும் நிறைய விடயங்களை அவதானிக்க வேண்டும். ஒவ்வொரு பாதையும் எங்களுக்கு சாதகமான முறையில் இருக்க வேண்டும் பாதையால் அணிகள் நகரும் போது எதிரி அவதானிக்காதவாறிருக்கவேண்டும். எதிரியின் பதுங்கித்தாக்கும் அணிகளின் நடமாட்டமற்ற பகுதியாக இருக்க வேண்டும். இது போன்ற பல விடயங்களை அவதானித்து தான் பாதை எடுக்க வேண்டும். அதாவது இராணுவம் எந்த உசார் நிலையிலிருந்தாலும் தேவைக்கேற்ப பாதை எடுத்தே ஆகவேண்டும்.

ஓயாத அலை- 02 இல் குறிப்பிட வேண்டிய ஒரு விடயம் உண்டு அதாவது பயிற்சி முடித்த குறுகிய காலத்திற்குள்ளேயே ஓர் அணியையும் இந்த வேவில் ஈடுபடுத்தினோம். இவர்களுக்கு வேவுப்பயிற்சியை வழங்கும்போது அதிலே சில போராளிகளின் திறமையான செயற்பாடும் இந்த சண்டையில் முக்கியத்துவம் பெறுகிறது. அதாவது 2ஆம் லெப்டினன் ரகுவரன் எனும் போராளி ஆரம்பத்தில் வேலைத் திட்டங்களுக்கு அனுப்பும்போது ஒரு வித்தியாசமான துணிச்சல், நகர்வு, பண்பு என்பவற்றை கொண்டிருந்தார். அவரின் திறமையை அவதானித்து இந்த பாதை எடுக்கும் செயற்பாட்டில் அவரையும் ஈடுபடுத்தினோம். பாதைகள் எடுக்கப்பட்டபின் மேற்கொண்ட பகுப்பாய்வில் அவரின் செயற்பாடு மிகவும் வித்தியாசமானதாகவிருந்தது. ஒரு அனுபவமுள்ள வேவுவீரன் எவ்வாறு செயற்படுவாரோ அதேபோல் இவர் பயிற்சியையும் பொறுப்பாளர்களால் விளங்கப்படுத்தப்பட்ட விடயத்தையும் வைத்து இராணுவத்தின் நடவடிக்கைகளை மிகவும் நுணுக்கமாக அவதானித்திருந்தார். அவ்வாறுதான் ஒவ்வொரு வேவுப் போராளிகளும் செயற்பட்டிருந்தார்கள்.

சண்டை நடைபெறுகின்ற சந்தர்ப்பங்களில் வேவுப்போராளிகளின் பணி என்ன வென்றால் திட்டத்திற்கேற்ப அணிகளை நகர்த்தி சண்டையை தொடங்கி மண் அரண்களில் ஏறி காப்பரண்களைக் கைப்பற்றியவுடன் வெளி லைனுக்குரியவர்கள் அங்கு நிற்க உள்ளே அணிகளை கொண்டு செல்ல வேண்டியவர்கள் அணிகளுடன் உட்செல்வார்கள்.

சிலபாதைகளை எடுக்கும் காலத்தில் எங்களுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டது. ஏனென்றால் அப்பகுதிகள்வெளியான பிரதேசம், அங்கு எதிரியின் அணிகள் வந்து பதுங்கியிருந்து தாக்குதல்களை பெருமளவில் மேற்கொண்டு வந்தன.

இந்த நிலையில் சண்டைக்கு முதல் நாள் அப்போது பொறுப்பாக இருந்தவரால் சொல்லப்பட்டது இந்தப்பகுதியால் பாதை எடுக்கப்படாவிட்டால் சண்டையை நிறுத்த வேண்டிய சூழல்

**இ.சசிக்குமார்**

ஏற்படுமென்று இதனை அந்த பாதைக் குரிய போராளிகளுக்கு தெரியப்படுத்தினோம். அதாவது இந்தப்பாதை தளபதி பால்ராஜ் அண்ணாவின் அணி போகவேண்டிய பாதை இந்த அணிதான் கட்டவுட்போட வேண்டிய அணி.

எனவே ஒரு புதுவிதமான முறையில் இதில் வேலையை மேற்கொண்டோம். அதாவது நாங்கள் ஒரு அணியை தயார்ப்படுத்தி நகர்ந்து சண்டை ஏற்படவேண்டிய நிலை உருவானால் சண்டையிட்டாவது பாதையை எடுப்பது என்ற நிலையில். மிகக் கூடிய ஆபத்துக்களை



(07 ஆம் பக்கம் பார்க்க)




**12-09-2005**
**18-09-2005**



## 12

➡ வவுனியா நகரில் சிறிலங்காப்படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது ஈழநாதம் பத்திரிகை விற்பனையாளர் உட்பட நால்வர் படையினரால் கைது.

➡ மன்னார் முசலிப்பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் அனுமதியின்றி வந்த சிறிலங்கா பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் கைது செய்யப்பட்டு தமிழீழக் காவல்துறையினரால் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.



➡ யுத்தநிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிட்ட சரத்துக்கு அமைவாக இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் அரசியல் பணிபுரியும் போராளிகளுக்கும் பொறுப்பாளர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படாத நிலையில் பாதுகாப்பு என்பது அச்சுறுத்தல் என்ற முழுமையான கட்டத்தை அடைந்த நிலையிலும் தான் எமது தேசியத்தலைவரின் பணிப்பிற்கிணங்க அரசியல் போராளிகள் யாவரும் அரசகட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்து முழுமையாக வெளியேறி எமது கட்டுப்பாட்டுப்பகுதிக்கு வந்துள்ளோம் என யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி பளையிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறைச் செயலகத்தில் வைத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசிய போது தெரிவிப்பு.

➡ வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியிலுள்ள சன்.ரி.வி.மீள்ஒளிபரப்பு நிலையம் மீது இனந்தெரியாதோரால் துப்பாக்கிப் பிரயோகமும் கைக்குண்டு வீச்சும் நடத்தப்பட்டது.

➡ வவுனியா மாவட்ட அரசியல் துறையினருக்கும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்குமிடையில் புளியங்குளத்தில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

## 13

➡ யாழ்.இணுவிலில் தமிழ்வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத குழுவினரால் சுட்டுக்கொலை.

➡ யாழ்.நெல்லியடிப்பகுதியிலுள்ள வாகன திருத்தகம் ஒன்றில் இருந்து இளைஞர் ஒருவரது சடலம் மீட்பு.

➡ கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில் சிறப்பிடம் பெற்ற தமிழ் மாணவர்களுக்கு தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் பரிசில்களை தலைவரின் சார்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சமாதான செயலகத்தில் வைத்து வழங்கினார்.



➡ சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில் தன்னை ஆதரிக்கும் ஜாதிகஹெல உறுமயவுடன் சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ மேற்கொண்ட ஒப்பந்தம் கண்டி தலதா மாளிகையில் மதவழிபாடுகளுடன் பரிமாறப்பட்டது.

## 14

➡ தமிழ்தேசியக் கூட்டமைப்பினருக்கும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது மூன்று முக்கியவிடயங்கள் பற்றி ஆராயப்பட்டன.



➡ வவுனியா-தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் முல்லை. மாவட்ட மக்களின் எழுச்சிப்பிரகடன மாநாடு புதுக்குடியிருப்பு 2ஆம் லெப்டினன் மாலதி விளையாட்டு மைதானத்தில் எழுச்சியுடன் இடம்பெற்றது.

➡ திருகோணமலை மாவட்டத்தில் உள்ளூர், வெளியூர் அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணத்தைச் சந்தித்து கலந்துரையாடினர்.

➡ மட்டக்களப்பில் சிறிலங்காப் படையின் துணைப்படையாக இயங்கும் ராசிக்குழுப் பொறுப்பாளர் காந்தி என்றழைக்கப்படும் சார்ஜன்ட் நவரட்ணராஜா கைக்குண்டுத்தாக்குதலில் பலி.

➡ மன்னாரில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததையடுத்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சிறிலங்காப் பொலிசார் மூவரையும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் கிளிநொச்சியில் சந்தித்துப் பேசினர்.

➡ மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தின் குருக்கள் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

➡ கொழும்புகோட்டையிலுள்ள பொலிஸ் தலைமையகத்தின் மூன்றாவது மாடியில் தீ விபத்து ஏற்பட்டது. இதில் ஆவணங்கள் எரிந்து சாம்பராகின.

## 15

➡ தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவின் ஆரம்பநிகழ்வில் திலீபனின் திருவுருவப்படத்திற்குத் தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தினார்.

➡ திருகோணமலை நகரிலிருந்து மூன்று மைல் தூரத்திலிருக்கும் அநுராதபுரச் சந்தியில் உள்ள சிறிலங்கா வான்படை காவலரண் ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

➡ தமிழீழத்தில் நடைமுறையில் ஒரு அரசு இயங்கிவருவதை நான் நேரில் சென்று பார்த்தேன் என்று அவுஸ்திரேலியாவின் நியூசௌத் வேல்ஸ் மாநில ஸ்ரத்பீல்ட் தொகுதியின் அரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வேர்ஜினா ஜட்ஜ் நியூசௌத்வேல்ஸ் மாநில பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

➡ ஒன்பது இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவுடன் முச்சக்கர வண்டியில் பயணம் செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் இளைஞர்கள் உட்பட மூவர் புறக்கோட்டையிலுள்ள படையினரின் சோதனைச் சாவடியில் வைத்து கைது.

## 16

➡ யாழ்.வடமராட்சி கடற்பரப்பில் வைத்து இளைஞர் ஒருவர் சிறிலங்கா கடற்படையினரால் கைது.

➡ வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணியைச் சேர்ந்த நபர் ஒருவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொலை.

➡ கொழும்பு நகரில் முப்படையினரும் பொலிசாரும் நடத்திவரும் தேடுதல்கள் மற்றும் சுற்றிவளைப்புக்களில் ஏழு தமிழ் இளைஞர்கள் கைது.

➡ அநுராதபுரம் பழைய பேருந்து நிலையத்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் முச்சக்கர வண்டிச் சாரதியொருவர் பலி.

➡ கொக்குவில் கிழக்குப் பகுதியில் கடந்த ஒருவருடமாகத் தங்கியிருந்து தகாத நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும். மலையாள மாந்திரீகர் ஒருவர் பாதிக்கப்பட்டசிலரால் தாக்கப்பட்டு வீடும் வாகனங்களும் எரிக்கப்பட்டன.

## 17

➡ யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்குமிடையில் பேச்சுவார்த்தையை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து நியூயோர்க்நகரில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் நோர்வே பிரதமருக்குமிடையே நடைபெற்ற சந்திப்பின் போது ஆராயப்பட்டது.

➡ சிறிய மற்றும் கிராமிய கைத்தொழிலுக்கான துணை அமைச்சரும் ஊடகத்துறைபிரதி அமைச்சருமான சேகு இஸ்ஸதீனின் பிரத்தியேக செயலாளர் வாகன விபத்தில் பலி.

➡ தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு லண்டனில் கிறீன்போட் பகுதியிலுள்ள அசெம்பிளி மண்டபத்தில் ஆரம்பமானது. இதன்போது விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன்பாலசிங்கம் அவர்கள் எழுதிய அரசியல் வரலாற்று நூலான "போரும், சமாதானமும்" நூல் அரங்கில் வெளியிடப்பட்டது.

➡ மறவன் பயிற்சிப் பாசறையில் தமிழீழ கடற்படையின் துணைப்படை மூன்றாம் அணியின் பயிற்சிகள் நிறைவடைந்தன.

➡ இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள நிவித்திகல என்ற இடத்தில் கொள்ளை முயற்சி ஒன்றைத் தடுக்க முயன்ற இரண்டு பொலிசார் சுட்டுக்கொலை.

## 18

➡ ஐக்கிய தேசியக்கட்சியின் விசேட சம்மேளன மாநாடு கொழும்பு நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது.

➡ திருகோணமலை நிலாவெளியில் இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோரால் கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

## ஓயாத அலை-02...

சந்திக்க வேண்டிய சந்தர்ப்பத்திலும் அந்த போராளிகளின் திறமையான செயற்பாட்டினால் அந்தப்பாதையை எடுத்து அதனூடாகவே மறுநாள் அணிகளை நகர்த்தினோம்.

ஒரு பகுதிக்கு சுகந்திரன் என்ற போராளி பொறுப்பாக நின்று செயற்பட்டார். அவர்கள் மாலை 6.30 இற்கு குளத்து தண்ணிக்குள் இறங்கினால் காலை 4.30 இற்கு பிறகுதான் அவர்கள் கரைக்கு வருவார்கள் 10 மணித்தியாளம் வரையில் தண்ணிக்குள்ளிருந்து நீண்டநேரம் அவதானித்தார்கள் அதாவது சில இடங்களில் தாழ்வான பகுதியும் சில இடங்களில் தாழ்வற்றபகுதியுமாக இருந்தது. அதற்குள் சத்தமின்றி அணிகள் நகர்வது என்றால் மிகக் கடினம் அதற்கேற்றவாறு வேவு பார்க்க வேண்டியிருந்தது. இதன்படி இப்பகுதியால் குறிப்பிட்ட நேரத்திற்குள் அணிகள் நகர்த்தப்பட்டன.

சண்டைக்கான பயிற்சிகளை அணிகளுக்கு வழங்கும்போது வேவுப்போராளிகளும் ஈடுபடுவார்கள் ஏனென்றால் இவர்களின் வழிகட்டல் அணிகளுக்கு அவசியமானதாக இருக்கும்.

ஒருபகுதியால் சண்டை அணிகள் நகர்ந்து கைப்பற்ற வேண்டிய அரண்கள் எல்லாம் பிடிக்கப்பட்டுவிட்டன. இதற்கு லெப். கேணல் சித்தா பொறுப்பாக சென்றார். பின்பு பகலில் இராணுவம் மிக முனைப்பாக சண்டையிட ஆரம்பிக்கும் போது இந்த அணியினரின் துப்பாக்கிகள் நீருக்குள்ளால் சென்றதால் செயற்படாது போனது இதனால் அணிக்கு இழப்பு அதிகரிக்க தொடங்கியது லெப்.கேணல் சித்தா உட்பட 40 பேர்வரை குளத்து பண்டில் வீரச்சாவடைந்தனர். இதேபோன்று இன்னுமொரு பாதையிலும் குழப்பங்கள் ஏற்பட்டன. இவ்வாறு இராணுவம் அதி உசார் நிலையில் இருந்த போதும் வேவு வீரர்களின்திறமையான வேவுச் செயற்பாட்டினால் தான் ஓயாத அலைகள் 02 சமரை வெற்றி கொள்ள முடிந்ததென அன்று பொறுப்பாக இருந்த தளபதிகள் கூறினார்கள் அது உண்மையும் கூட.

ஓயாத அலைகள் 02 இல் உள்வேவு என்பதும் முக்கியமானதொன்று இந்த பொறுத்தவரையில் வேவுப்போராளிகள் முகாமிற்குள் ஊடுருவிவிட்டார்கள் என்பதை எதிரி அறிந்திருந்த நிலையிலும் போராளிகள் உட்புகுந்து மிகவும் துல்லியமாக வேவு பார்த்திருந்தார்கள். அதாவது எதிரியின் முகாமுக்குள் அவனது கட்டளைத் தளங்கள், ஆயுத களஞ்சியங்கள், முக்கிய தளங்கள், மோட்டார் தளங்கள், உள் அரண்கள் முட்கம்பிவேலிகள் அனைத்தும் எவ்வாறு எந்த அளவு உசார்நிலையில் இருக்கின்றன. என்பதையும் உள் அரண்கள் எத்தனை எந்த அளவு தூரத்தில் உள்ளன என்பனவற்றைக் கூட வேவுப் போராளிகள் தெளிவாக அவதானித்திருந்தார்கள். வேவைப் பொறுத்தவரையில் தடையங்களை விட்டால் அந்த சண்டையே குழம்பிவிடும். அதற்கேற்றவாறு வேவு வீரன் செயற்படவேண்டும். உண்மையில் வேவு வீரன் விசுவாசமானவனாகவும் நம்பிக்கையுடையவனாக துணிச்சல் நிறைந்தவனாக இல்லாதிருந்தால் அந்த வேவுவீரனாலேயே பல போராளிகள் வீரச்சாவடைய வேண்டிய நிலை ஏற்படும் ஆகவே இந்த சண்டையில் அவ்வாறு எந்த செயற்பாடும் நடைபெறாதது வேவுவீரரின் திருப்திகரமானசெயற்பாட்டையே வெளிப்படுத்துகின்றது.

பொதுவாக சண்டை ஆரம்பிக்கின்ற நேரத்தில் அனைத்து பாதைகளும் ஒழுங்கமைக்கப்பட்டு குறித்தநேரத்திற்குள் அணிகள் நகர்ந்து சண்டையில் ஈடுபட்டன. இந்த சண்டையில் தடை உடைப்பிற்கான செயற்பாட்டில் வீரச்சாவு மிகக்குறைவாகவே இருந்தது.

பொதுவாக வேவு வீரர்கள் திரட்டும் தகவல்கள் அனைத்தும் தளபதிகளூடாக தேசியத் தலைவருக்கு அனுப்பப்பட்டு தேசியத் தலைவராலேயே சண்டைக்குரிய திட்டங்கள் வகுக்கப்படும் அவரின் திட்டத்திற்கேற்பதான் மாற்றங்கள் மேற்கொள்வதானால் செய்வோம். இந்த சண்டையில் ஏற்கனவே நாங்கள் தெரிவு செய்த சில பாதைகளை தலைவர் நிறுத்தினார். அதற்கேற்ப அடுத்த பாதைகளை எடுத்துத்தான் அணிகளை நகர்த்தினோம்.

இவ்வேவுப்புலிவீரர்களின் அணிகளின் துணிகரச் செயற்பாட்டுக்கு வித்திட்டவர்கள் வீரச்சாவைத்தழுவிய வேவுப்புலி மாவீரர்கள் என்பதே மிகப்பொருத்தமுடையது. ஏனெனில் வேவுக்காக செல்கின்ற ஒவ்வொருபோராளியும் வீரச்சாவடைகின்ற பொழுது அடுத்த வேவு வீரனுக்கு ஏற்படுகின்ற உணர்வு எதிரியின் மீது தாககுதலை நடத்தவேண்டுமென்ற உத்வேகத்தை அதிகரிக்கும். ஆகவே எமது விடுதலையின் ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னும் வீரச்சாவடைந்த ஒவ்வொரு மாவீரனின் தியாகமும் விடுதலை உணர்வுமே உத்வேகத்தை அளிக்கின்றன.

(தொடரும்...)

# இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

## பெருந்தெருக்கள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# கேள்வி கோரல்கள்

## சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் நிதி வழங்கலின் ஊடாக

## முல்லைத்தீவு பிராந்திய வீதி, கட்டட புனரமைப்பு வேலைத்திட்டம்

மாகாணப்பணிப்பாளர் வ – கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா அதன் கேள்வி கோரல் சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர் முல்லைத்தீவு வலயத்திற்குட்பட்ட பின்வரும் வேலைகளிற்கு மூடி ஒட்டப்பட்ட கேள்வி கோரல்களை பெற்றுக் கொள்ள உள்ளது.

| வீதியின் பெயர் | மாவட்டம் | தகுதி | பாதுகாப்புத் தொகை |
|---|---|---|---|
| பருத்தித்துறை – மருதங்கேணி வீதியின் 25.90 – 30.97 கி.மீ மற்றும் சோரன்பத்து – தாளையடி வீதியின் 6.50 – 7.48 கி.மீ பகுதியை தார் ஊற்றி கல் பரப்புதல் (SBST) | கிளிநொச்சி | M6 அல்லது அதற்கு மேல் (வீதி நிர்மாணம்) | ரூபா 70.000.00 |
| நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலய மீள் நிர்மாணம் | முல்லைத்தீவு | M6 அல்லது அதற்கு மேல் (கட்டட நிர்மாணம்) | ரூபா 70.000.00 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 10.10.2005 அன்று பிற்பகல் 2.00 மணியுடன் முடிவடையும்

கேள்விப் பத்திரங்கள் தயாரிக்கப்படுவதற்குரிய படிவங்களை பின்வரும் காரியாலயங்களில் இருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் | மின் அஞ்சல் |
|---|---|---|
| மாகாணப்பணிப்பாளர் வ – கி (வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை கண்டி வீதி, வவுனியா. | 024 – 2222826 | rdanorth@sltnet.lk |

கேள்விப்பத்திர ஆவணங்கள் 21.09.2005 தொடக்கம் மீளளிக்கப்பட முடியாதவைப்புத் தொகையான 1,725.00 (பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்துவதன் மூலம் விநியோகிக்கப்படும்.

முன் கேள்வி கோரல் கூட்டம் 29.09.2005இல் மாகாணப்பணிப்பாளர் – கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா காரியாலயத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும்

02 நிறைவேற்றும் காரியாலயம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையே ஆகும்.

03 தகுதி வாய்ந்த கேள்வி கோருபவர்கள் பின்வரும் தகைமை பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

அ.கேள்வி கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பெந்தெருக்கள் மற்றும் கட்டட நிர்மாணத்தில் மேல் வேலைகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தரங்கள் அல்லது அதற்கு மேல் தற்போது பதிவு செய்திருத்தல் வேண்டும்.

ஆ.கேள்வி கோருபவர் இலங்கை தேசிய நிர்மாணசங்கத்தில் (NCASL) செல்லுபடியாகும் ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக் கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

04 கேள்வி கோரல் ஆவணங்களை மாகாணப்பணிப்பாளர் வ – கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா அல்லது பிரதம பொறியியலாளர்,வீதி அபிவிருத்தி அதிகார சபை 155 ஆம் கட்டை, கிளிநொச்சி அலுவலகங்களில் எதுவித கட்டணங்களும் இன்றி பார்வையிட முடியும்

05 கேள்விப் பத்திரங்கள் கேள்வி கோரல் முடிவுத்திகதியில் இருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.

01 கேள்விப் பத்திரங்கள் மேலே தரப்பட்ட வேலைகளிற்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு தொகைகளுக்கு உரிய பாதுகாப்பு பத்திரங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்பு பத்திரங்களை கொண்டிராத கேள்வி கோரல்கள் நிராகரிக்கப்படும்.

02 கேள்விப் பத்திரங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின்பு உடனடியாக மாகாணப்பணிப்பாளர் வ – கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்வி கோருபவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் கேள்விப் பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

03 மேலதிக விபரங்களிற்கு தயவு செய்து பின்வரும் அலுவலகங்கள், தொலைபேசி இலக்கங்கள், மின் அஞ்சல் முகவரிகள் மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் | மின் அஞ்சல் |
|---|---|---|
| மாகாணப்பணிப்பாளர் வ – கி (வ), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டி வீதி, வவுனியா. | 024 – 2222826 | rdanorth@sltnet.lk |
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 155 ஆம் கட்டை, கிளிநொச்சி. | 021 – 2285724 | |

மாகாணப் பணிப்பாளர் வ – கி(வ)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கண்டி வீதி,
வவுனியா.

(சி.12827)

அழகியல் கலாமன்றம்
கிளிநொச்சி

**பணிநிலை வெற்றிடம்**

காவலாளி:-பகுதிநேரம்/முழுநேரம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பதாரிகள் சுயவிபரத்துடன் 28.09.2005 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கும் 5.00 மணிக்கும் இடையில் நேரில் சமுகம் தரவும்.

அதிபர்.

(சி.12837)


# தீவிரவாதிகளை எதிர்க்க கூட்டுப்படை; முதலமைச்சர்கள் மாநாட்டில் தீர்மானம்

(புதுடில்லி)

தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு கூட்டுப்படை அமைக்க நேற்று முன்தினம் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் பாதிப்புள்ள பகுதியில் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கான நடவடிக்கை எடுப்பது. தீவிரவாதிகளின் தவறான பாதை குறித்து ஆதிவாசிகளுக்கு எடுத்துரைப்பது, மாநில காவல்துறையை வலுப்படுத்துவது போன்ற முடிவுகள் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

கூட்டத்தில் கலந்துகொண்ட மத்திய உள்துறையமைச்சர் சிவராஜ் பட்டீல் கருத்துரைக்கையில், தீவிரவாதிகளை சமாளிக்க இருவித அணுகுமுறைகள் பின்பற்றப் படுமென்றார். தீவிரவாதிகளும் சமுதாயத்தில் ஒரு அங்கம் என்பதை மனதில்கொள்ளும் அதே சமயம், உறுதியுடன் இனப் பிரச்சினையை அணுகுமாறு உள்துறையமைச்சர் கேட்டுக்கொண் டார்.

## அத்வானியின் பதவிவிலகலால் வெற்றிவாய்ப்பு பாதிக்காது

(சென்னை)

கட்சித்தலைவர் பதவியிலிருந்து விலகும் அத்வானியின் முடிவால் பீகார் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணியின் வெற்றி வாய்ப்பு எந்தவகையிலும் பாதிக்கப்படமாட்டாது என்று மாநிலங்களவை பா.ஜ.க. குழுத் தலைவர் ஜஸ்வந்சிங் தெரிவித்துள்ளார்.

அத்வானிக்கு பின்பு தலைவர் பதவிக்கான நபரைத் தேர்வு செய்வது குறித்து கட்சி முடிவு செய்யும்.


கட்சியின் தலைவர் பதவிக்கு வருவதற்கான ஆசை எதுவும் என்னிடம் இல்லை. அத்வானியின் பதவி விலகல் முடிவை கட்சி ஆதரிக்கின்றது. கட்சிக்கு நல்ல எதிர்காலம் உள்ளது என்று நாம் நம்புகிறோம் என அவர் தெரிவித்துள்ளார். — ஜஸ்வந்சிங்



# தனியார் பேருந்து, ஓட்டுநர், நடத்துநர் பார்வைக்கு
# தமிழீழப் போக்குவரவுக்கழகம்

25.09.2005 ஆம் நாள் ஞாயிறு மாலை 7.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் முக்கிய கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்,
புதுக்குடியிருப்பு.

(சி.12835)





கடற்புலி மாவீரர்கள் நினைவாக தமிழீழ கடற்படைப் போராளிகளின் படையணிகளுக்கிடையில் கடந்த 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற துடுப்பாட்ட இறுதிப் போட்டி அணிகளை முதலாவது படத்திலும், போராளிகளுக்கிடையிலான பாசல் பரிமாற்றம், வலைப்பந்தாட்டப் போட்டி என்பவற்றை முறையே இரண்டாவது, மூன்றாவது படங்களில் காணலாம். (படங்கள் - சசி)

# பரபரப்பான 30 ஓவர் கடினப் பந்துப்போட்டி கிளிநொச்சி ம.வி.க்கு சிறப்பான வெற்றி





கிளிநொச்சி ம.வி. 13 வயது அணிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 13 வயதுப் பிரிவு அணிக்கும் இடையிலான 30 ஓவர்கள் கொண்ட பரபரப்பான நட்புறவு கடினப் பந்து போட்டியில் கிளி. ம.வி. அணியினர் 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றனர்.

கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளி. ம.வி. அணியின் தலைவர் ஜனகன் துடுப்பாடத்தைத் தீர்மானித்தார்.

இதன்படி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய வா. சஞ்சீவன் நிதானமாகவும், அதிரடியாகவும் ஆடி ஏழு நான்கு ஓட்டங்கள் அடங்கலாக அரைச் சதத்தை எட்டினார். அவர் 57 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இவரைவிட ஜனகன் 16, நிரோசன் 17 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். இதன்படி கிளி. ம.வி. அணியினர் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சுஜிதன், பென்சமின் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், பிரசோபனன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

125 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் ஆரம்பத்தில் லவன் பிரசோபனின் நிதானமான ஆட்டத்தின் மூலம் வலுவான நிலையை அடைந்தபோதும் கிளி. ம.வி. அணியினரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது அணியின் ஓட்ட எண்ணிக்கை 77ஆக இருக்கும்போது சரிவை எதிர்நோக்கியது. இதற்கு கிளி.ம.வி.அணியின் ஜனகன், கிரிசாந் ஆகியோர் காரணமாக அமைந்தனர். இந்த நிலையிலும் தாக்குப்பிடித்து ஆடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 27.1 ஓவரில் 110 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் லவன் 15, பிரசோபனன் 32, சிறிகுகன் 22 ஓட்டங்களை முறையே அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கிரிசாந் நான்கு விக்கெட்டுக்களையும், ஜனகன் மூன்று விக்கெட்டுக்களையும், றஞ்சீவ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இரண்டு விக்கெட்டுக்கள் ரன் அவுட் முறையில் வீழ்த்தப்பட்டது. அண்மையில் நடைபெற்ற கடினப்பந்து போட்டியில் கிளி. ம.வி. அணி தொடர்ச்சியாக நான்கு போட்டியில் வெற்றி பெற்று அதன் வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது.

## முக்கிய கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர் அனைவருக்குமான முக்கிய கலந்துரையாடல் நாளை காலை 10.00 மணிக்கு தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்தில் இடம்பெறவுள்ளதால் அனைவரையும் தவறாது சமூகம் தரும்படி தமிழீழ விளையாட்டுத் துறை இணைப்பாளர் இன்பன் கேட்டுள்ளார்.

## ஜனசக்தி கிண்ண இறுதியாட்டத்திற்கு மனோகரா, பொமேர்ஸ் அணிகள் தெரிவு

ஜனசக்தி சுழல் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகமும் தகுதிபெற்றுள்ளன.

இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட இரு அணிகளும் அரையிறுதியாட்டத்தில் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து விளையாடிய வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் எதிர்த்து விளையாடிய கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகத்தை 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிட்டத்தக்கது. (ஸ்ரீ)

# கிளிநொச்சி கட்டடத் திணைக்கள அணியை இலகுவாக வென்றது கல்வித் திணைக்கள அணி




உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டுவரும் 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியின் நேற்றைய போட்டியில் கிளிநொச்சி கல்வித் திணைக்கள அணி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் ஆடிய கட்டடத் திணைக்கள அணி பத்து ஓவர் நிறைவில் 20 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் உதிரிகளாக பத்து ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்து வீச்சில் தனுராஜ் மூன்று ஓவர் பந்து வீசி இரண்டு ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இதில் மூன்று விக்கெட்டுக்களை அடுத்தடுத்து வீழ்த்தி ஹட்ரிக் சாதனை படைத்தார் தனுராஜ். சுதர்சன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

21 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த கல்வித் திணைக்கள அணி இரண்டு ஓவரில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது. தனுராஜ் 18 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார்.

இப்போட்டிக்கு நடுவர்களாக சுபானந், லெனின் ஆகியோர் கடமையாற்றினர்.

இன்று மாலை நடைபெறும் போட்டியில் கிளிநொச்சி கச்சேரி அணியை எதிர்த்து வீதி அபிவிருத்தித் திணைக்களம் மோதவுள்ளது.



# பதான் அபாரம்; சிம்பாப்வே பரிதாபம்



சிம்பாப்வேக்கு கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இந்தியா அணிக்கும், சிம்பாப்வே அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இர்பான் பதானின் அபார பந்து வீச்சில் சொந்த மண்ணிலேயே சிம்பாப்வே அணி பின்னடைவைச் சந்தித்தது.

நேற்று ஆரம்பமான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய சிம்பாப்வே அணியை முதலில் துடுப்பாட அழைத்தது.

இதன்படி முதலாவது இனிங்சை ஆடிய சிம்பாப்வே அணி ஆரம்பம் முதலே இர்பான் பதானின் பந்து வீச்சில் நெருக்கடியைச் சந்தித்ததுடன் 161 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்து வீச்சில் இர்பான் பதான் சிறப்பாக பந்து வீசி ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இது டெஸ்ட் இனிங்ஸ் ஒன்றில் இர்பான் பதான் பெறும் அதிக விக்கெட்டுக்களாகும். ஹர்பஜன்சிங் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பாடும் இந்திய அணி முதல் இனிங்சிற்காக சேவாக்கின் விக்கெட்டை இழந்து 183 ஓட்டங்களை பெற்றிருந்தது. டிராவிட், கம்பீர் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

# டில்சான், சமரவீர சதம் சிறிலங்கா அணி சாதனை



சிறிலங்காவுக்கு கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணிக்கும் சிறிலங்கா அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று கொழும்பு சரவணமுத்து மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிறிலங்கா அணி முதலில் ஆடுவதாக அறிவித்தது. ஆரம்பமே அதிர்ச்சி. வெறும் 48 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர் பங்களாதேஷ் வீரர்கள். இதில் நூறாவது டெஸ்ட் போட்டியில் ஆடும் ஜெயசூரிய 13 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து நிதானமாக ஆடிய டில்சான் சமரவீரவுடன் ஐந்தாவது விக்கெட்டில் இணைந்த டில்சான் அதிரடியாக ஆட சிறிலங்கா அணியின் ஓட்ட வேகம் மளமளவென அதிகரித்ததுடன் இணைப்பாட்டமாக 275 ஓட்டங்கள் பெறப்பட்டதுடன் நேற்றைய ஆட்டநேர நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 449 ஓட்டங்களைப் பெற்று சாதனையும் படைத்தது.

இது டெஸ்ட் போட்டி ஒன்றில் ஒரு நாளில் பெறப்பட்ட அதிகபட்ச ஓட்டமாகவும் அமைந்தது.

துடுப்பாட்டத்தில் டில்சான் 168 ஓட்டங்களையும், சமரவீர 138 ஓட்டங்களையும் பெற்றனர். சமிந்த வாஸ் 61 ஓட்டங்களையும், முரளிதரன் 24 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது முறையே பெற்றுள்ளனர். பந்து வீச்சில் சயிட் ரசல், உசேன் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

## சிந்தனைக்கு



எமது வீரசுதந்திர வரலாறு
மாவீரர்களின் இரத்தத்தாலும்,
வியர்வையாலும், கண்ணீராலும்
எழுதப்பட்டிருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 21.09.2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


# சனாதிபதித் தேர்தல்

புலி வருகிறது, புலி வருகிறது என்ற கதையாக இருந்த சனாதிபதித் தேர்தல் எப்பொழுது என்ற அறிவிப்பு வெளியாகிவிட்டது. இதன் பிரகாரம் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் எனத் தேர்தல் ஆணையகத்தின் அறிவிப்பு தெரிவிக்கின்றது.

இலங்கையில் இன்று சனநாயகம் எத்தனை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பினும், இங்கு மலிவாகியுள்ளதொரு பொருள் தேர்தல் ஆகும். ஆண்டிற்கு ஒன்று அன்றி ஒன்றிற்கு மேற்பட்ட தேர்தல்கள் நடைபெறும் நாடாக சிறிலங்கா உள்ளது. பாராளுமன்றத்திற்கென வருடத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட தேர்தல்களை நடத்துவதற்குச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தயாராக இருப்பினும் அரசியல் யாப்பு அதற்கு இடம் அளிப்பதாக இல்லை.

ஆயினும் ஆண்டிற்கு ஒரு தேர்தல் பாராளுமன்றத்திற்கோ அன்றி மாகாண சபைகளுக்கோ நடைபெறுவதாக இருப்பினும் சனாதிபதித் தேர்தல் என்ற வகையில் சனாதிபதியாக இருப்பவர் விரும்பாதவரை ஆறு வருடங்களுக்கு ஒரு தடவையே சனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு வாய்ப்புண்டு.

இம்முறை நவம்-17 ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தல் கடந்த தேர்தல்களை விடச்சற்று வித்தியாசமானதாகவே இருக்கும். ஏனெனில், இம்முறை தேர்தலில் தற்பொழுது ஆளும் கூட்டணி பல முரண்பாடுகளுக்கு மத்தியில் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளது. அதாவது ஆளும்கட்சி வேட்பாளராக உள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தமது கட்சிக்குள்ளேயே நெருடிக்கடியானதொரு சூழ்நிலையையே எதிர்நோக்கி உள்ளார்.

வழமை போலவே இம்முறையும் தேர்தலில் போட்டியிடும் இரு தரப்பும் ஒன்றிற்கு ஒன்று எதிரான நிலைப்பாட்டுடன் தேர்தல் களத்தில் இறங்குகின்றன. இரு கட்சித் தலைவர்களும் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு எனக் கூறிக்கொண்டாலும், ஒரு தரப்புச் சமாதானப்பேச்சுவார்த்தையை வலியுறுத்துவதாகவும், இன்னொரு தரப்பு பேச்சுவார்த்தைக்கு எதிரான- அதாவது யுத்தநிறுத்தம், அரசியல்தீர்வு போன்றவற்றிற்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகவும் உள்ளன.

அதாவது ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து ஒன்றுபட்ட இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தமக்கு வாக்களியுங்கள் என்று கோருகின்றார். ஆனால், மகிந்தராஜபக்ஷவும், கூட்டணியான ஜே.வி.பி யினரும் இலங்கை பிளவுபடுவதைத் தடுக்க தமக்கு வாக்களிக்குமாறு கோருகின்றனர். ஆனால் இவர்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வுகாண சமாதானப் பேச்சுவார்த்தையை மார்க்கமாக கொள்ளவில்லை. ஏனெனில் அவர்களின் தேர்தல் கூட்டு உடன்பாடு சமாதானப் பேச்சுக்களுக்கு இடமளிப்பதாக இல்லை. யுத்தத்தையே தெரிவாக அவர்கள் உடன்பாடு கொண்டுள்ளது. இதனை அவர்களால் மறுக்கவும் முடியாது.

இந்தவகையில் தேர்தல் வியூகங்கள் தெளிவாக மாறுபட்டவையாகவே உள்ளன. ஆகையினால் இரு வேட்பாளர்களில் யார் தெரிவாகின்றார்களோ அவர்கள் இலங்யையின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தி பொருந்தியவர்களாகவே இருப்பார்கள். ஆனால், இவர்கள் இருவரில் யார் வெற்றிபெறினும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று கிட்டும் என்பதில் நம்பிக்கை என்று எதுவுமே இல்லை.

எடுத்துக்காட்டாக ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெற்றிபெறின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படலாம் என்ற நம்பிக்கை பரவலாகவுண்டு. ஆனால் இப்பேச்சுவார்த்தைகளினால் நன்மை ஏதும் ஏற்படுமா? அதற்கான வாய்ப்புக்கள் தான் உண்டா? அதாவது ரணில் விக்கிரமசிங்க கூறிக்கொள்வது போல் ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக்காணத்தான் முடியுமா? அந்த அளவிற்கு அதிகாரங்களைப் பகிர்வதில் முன்னேற்றத்தைக் கொண்டுவர அவர்களால் முடியுமா?

இது நடைமுறையில் சாத்தியமாவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அதாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அதிகாரப் பகிர்வில் முன்னேற வேண்டிய மட்டத்திற்கு ரணில் விக்கிரமசிங்காவினால் முன்னேற முடியும் என எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு அவர் முன்னேற முடியுமாக இருப்பின் அவர் பிரதமராக இருந்த காலத்தில் மனிதாபிமான பணிக்கென உருவாக்கப்பட்ட 'சிரான' அமைப்பு முன்னேற்றம் காணும் வகையில் அவரின் நடவடிக்கை இருந்திருத்தல் வேண்டும்.

இதேவேளை, பிரதமர் மகிந்தராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெறுவாரேயானால் நாட்டில் விரைவிலேயே யுத்தம் தொடங்கப்பட்டுவிடலாம். ஏனெனில் ராஜபக்ஷவின் வெற்றி சமாதானத்திற்கு எதிரானவர்களின் வெற்றியாகவே இருக்கும். அதாவது, மகிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட ரீதியில் எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பினும் அவரின் ஆதரவு சக்திகள் நாட்டில் யுத்தத்திற்கான சூழ்நிலையைத் தோற்றுவித்துவிடும்.

ஆகையினால், சனாதிபதித் தேர்தில் யார் வெற்றிபெறினும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகிட்டும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஆனால், தேர்தலில் யார் வெற்றி பெறுகின்றார்கள் என்பதைப் பொறுத்து யுத்தம் குறித்த ஆருடங்களைக் கூறிவிட முடியும்.


# தியாகத் தீ!

*மக்கள் எழுச்சி வேணுமென்றான்*
*அது விடுதலை மீட்சிக்கு*
*தேவையென்றான் – அந்நிய*
*ஆக்கிரமிப்பை அறவே வெறுத்து*
*அதற்காய் மடிந்த தியாகத் தீபம் இவன்!*

*அள்ளி உணவை போட்டு*
*அடிமை கொள்ள நினைத்தவனை...*
*எச்சில் கூட விழுங்காது – பகை*
*மண் விட்டோட*
*மடிந்த அகிம்சைக் கணையிவன்!*

*எண்ணமில்லா இருந்திடலாம் – யாரும்*
*அன்னமில்லாது இருக்க முடியாது*
*எண்ணமெல்லாம் சுதந்திரமே*
*அதை கண்ணாய் வைத்து*
*உண்ணாதுதிர்ந்திட்ட உயிர்ப்பூ!*
*காந்திகூட தலை*
*குனிந்திருப்பார் – இவன்*
*ஈழக் காதல் கண்டு*

*வீரத் தீபமொன்று இங்கே*
*கொழுந்து விட்டெரிந்தது – அது*
*தமிழர் ஆன்மாவை உலுப்பிய தீ...*



*பகை ஆணவத்தை அடக்கிய தீ...*
*காந்தி தேசத்தை!*
*எதிர்க்க வைத்த தீ...*
*காலமெல்லாம் தமிழர் மனதில்*
*ஊறிவிட்ட விடுதலைத் தீ...*

ந. புரட்சிமாறன்

# எம்மீது வலிந்து திணிக்கப்படும் போரை எதிர்கொள்ள அனைவரும் தயாராகுவோம்

## – விடுதலைப் போருக்கான தேசிய அறைகூவலில் அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

"தமிழ் பேசும் மக்களாகிய நாம் அனைவரும் மீண்டும் ஓர் மிடுக்குப் பெற்று எம்மீது வலிந்து திணிக்கப் படும் போரை எதிர்கொள்வதற்கு தயாராகுவோம்" இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை விடுத்துள்ள "போருக்கான தேசிய அறைகூவல்" அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையின் இனப்பிணக்கு வரலாற்றில் போர் ஓய்வும் பேச்சுவார்த்தைகளும், பல தடவைகள் நடைபெற்ற போதும், அவற்றில் வெற்றியடைய முடியவில்லை. எனினும் சர்வதேச சமூகத்தின்பால் நாம் வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையில் கடந்த மூன்று வருட காலப் போர் ஓய்வும், சமாதான முன்னெடுப்புக்களும், சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வந்தும் உருப்படியான எந்த முடிவுகளும் எட்டப்பட முடியவில்லை. தற்போது யுத்த நிறுத்தம் கேள்விக்குள்ளாகியுள்ளது.

போராளிகள் தமிழ் இனப் பற்றாளர்கள், பொதுமக்கள் மீதான கொலைகளும் கொலை முயற்சிகளும், அச்சுறுத்தல்களும் தொடர்ந்த வண்ணமுள்ளன. அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணிபுரிந்த போராளிகளின் நடவடிக்கைகள் அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ளது. இவர்கள் உயிர் பாதுகாப்பு கருதி மீள அழைக்கப்பட்டுள்ளனர். போர் நிறுத்தத்தையும், போர் நிறுத்த உடன்பாட்டு விதிகளையும்: ஏற்பாடுகளையும், காப்பாற்றக்கூடிய நீடித்து பேணக்கூடிய உபாயங்கள் எதுவும இன்று இல்லையென்பது வெளிப்படையானது.

தமிழ் பேசும் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளையும் தமிழீழ தேசிய தலைமைக்கான ஆதரவையும், வரலாற்றில் எப்போதும் இல்லாதவாறு பெரும் எடுப்பில் வெளிப்படுத்தி வருகின்றனர். யூலை - 27 - 2005 இல் வவுனியா மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கிய பிரகடனம் வெளியிடப்பட்டது. அதனை தொடர்ந்து தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் எழுச்சி பிரகடனங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. செப்ரெம்பர் - 01 இல் கிளிநொச்சியல் இலட்சக்கணக்கான மக்கள் ஒன்று கூடி தமது அரசியல் நிலைப்பாட்டை பிரகடனம் செய்தனர் என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

சிறிலங்கா அரசிற்குள் பலத்த அதிகாரப்போட்டி நிலவுகின்றது. உட்கட்சி பூசல்களினாலும், பொருளாதார நலிவினாலும், இனவாத, மதவாத கடும் கோட்பாடுகளினாலும், அரச இயந்திரம் பலவீனப்பட்டு சிதைந்துள்ளது. வழமைபோல் அதிகார தக்கவைப்பிற்காக தமிழ் பேசும் மக்கள் மீது போர் வலிந்து திணிக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது. இதனால் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சமாதான செயல்முறை தொடர்பில் விரக்தியும், ஏமாற்றமும், ஏற்பட்டுள்ளது. தங்களது அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக அவர்கள் சிந்திக்க தலைப்பட்டுள்ளனர். தமிழ் மக்களுடைய வளமும், பலமும், இலட்சியப்பற்றும் எவ்வாறானதென்பதை சமகால போர் ஓய்விற்கு முன்னைய காலங்களில் வெளிப்படுத்தியிருக்கின்றோம்.

தற்போதைய அரசியல் களயதார்த்தத்தின் அடிப்படையில் போர் முனைப்பும் சமாதான நடவடிக்கைகளை முடக்கவும், சிறிலங்கா அரசும், அதன் இனமத கடும் கோட்பாட்டாளர்களும், தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் சர்வதேச அனுசரணையை புறந்தள்ளவும், அதிகார பகிர்வு யோசனையை கைவிடவும், ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை முன்னிறுத்தி பௌத்த சிங்கள தேசத்திற்கு முதன்மை நல்கவும், பல இனவாத உள்ளக உடன்பாடுகளும், கூட்டுக்களும், உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அரசியல் களத்தின் அகப்புற நிலைப்பாடுகளிடையே தமிழ் பேசும் மக்களாகிய நாம் தீர்க்கமான நிலைப்பாட்டிற்கு வரவேண்டிய சூழ்நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். சிறிலங்கா அரசின் அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகளை அதற்கே உரிய வழிகளிலும் அதன் போரியல் முன்னெடுப்புக்களை அதற்கே உரிய வழிகளிலும் சந்திப்பதற்கு நாம் தயாராகியுள்ளோம். யுத்த முனைப்புகளுக்கு முகம் கொடுத்து யுத்தத்தை யுத்தத்தின் வழியிலேயே சந்தித்து எமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்க தீர்மானித்துள்ளோம். தமிழ் பேசும் மக்களின் இவ் அரசியல் நிலைப்பாட்டிற்கும்,தேசிய இன விடுதலை போராட்டத்திற்கும், சர்வதேச சமூகம் உலக அரசின் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக எமது விடுதலை போரை அங்கீகரித்து ஆதரவு அளிக்குமாறு வேண்டுகிறோம்.

தமிழ் பேசும் மக்களாகிய நாம் அனைவரும் மீண்டும் ஓர் மிடுக்குப் பெற்று எம்மீது வலிந்து திணிக்கப்படும் போரை எதிர்கொள்வதற்கு தயாராகுவோம். அனைவரும் முழுமையான ஆயுதப் பயிற்சியை பெறுவோம். எமது அனைத்து வளங்களையும், பலங்களையும், விடுதலைப் போர்முனைக்கு வழங்குவோம். போர் வலியதெனினும் எமது தாயக விடுதலைக்கு அதுவே தவிர்க்க முடியாத வழியாகும் என்பதால் இன்றிலிருந்து எம்மையும், எம்மை சூழவுள்ள யாவற்றையும், தமிழீழ தாயக விடுதலைக்கு அர்ப்பணிப்போம் என உறுதியெடுத்துக் கொள்கிறோம். (சோ)

# இராஜினாமாவை மறுக்கிறார் சபாநாயகர் லொக்குபண்டார

சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகர் பதவியிலிருந்து விலகவுள்ளதாக வெளியான செய்திளை லொக்கு பண்டார மறுத்துள்ளார்.

இது தொடர்பாக லொக்கு பண்டார கூறியதாவது;


ஐ.தே.க வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தன்னை ஆதரிக்குமாறு என்னிடம் வேண்டுகோள் விடுக்கவில்லை. ஊடகங்களில் செய்திகள் வெளியானது போல் சபாநாயகர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யப் போவதில்லை.

ரணில் என்னை ஒரு போதும் அழைக்கவில்லை. ஆனால் அப்படியான வேண்டுகோள் விடுக்கப்பட்டால் அது குறித்து நான் என்ன செய்ய வேண்டும் என்று சிந்திப்பேன். ஏனெனில் முழுமையாக ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் பரப்புரைப் பணிகளில் ஈடுபடுவதற்காக சபாநாயகர் பதவியிலிருந்து விலக வேண்டியிருக்கும் என்பதையே குறிப்பிடுகிறேன் என்றார் லொக்குபண்டார.


உயிர்காக்கும் பணியில் ஒன்றிணைவோம்
இரத்தவங்கி-யாழ். போதனா மருத்துவமனை

# தலைவரின் தீர்க்கதரிசனமான பார்வையில் இன்றும் வீச்சோடு இருக்கின்றோம்

## தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை



போர் ஓய்வு விடுதலை போராட்டங்களை நசுக்குவதாகவே அமைந்துள்ளமை உலக நாடுகளில் நடந்தேறியுள்ளன. ஆனால் நாம் அதற்கு விதிவிலக்கானவர்கள். எமது தேசியத் தலைவரின் தீர்க்க தரிசனத்தில் நீண்டதொரு பார்வையில் போராட்டத்தின் ஒவ்வொரு அசைவுகளும் பார்க்கப்பட்டு கொண்டிருக்கிறபடியால் ஒரு வீச்சோடு இருக்கின்றோம் இவ்வாறு தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

கடற்புலி தளபதி லெப்.கேணல் நிரோஜன், லெப்.கேணல் நளாயினி, கடற்புலிகளின் துணைத்தளபதி இரும்பொறை ஆகியோரினதும் 10.03.2003 அன்று சர்வதேச கடற்பரப்பில் வீரச்சாவடைந்த கரும்புலி லெப்.கேணல் ரஞ்சன், லெப்.கேணல் கதிர் உட்பட வீரகாவியமான மாவீரர்களின் நினைவாக கடற்படை அணிகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வின் பரிசளிப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஏனைய நாடுகளில் போர் நடந்து கொண்டிருந்த இடங்களில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி நீண்ட காலத்திற்கு ஓய்வை உண்டு பண்ணி அந்த ஓய்வுகளுக்கு ஊடாக போராடிக் கொண்டிருந்த அந்த போராளிகளின் கட்டமைப்பை சிதைத்திருக்கிறார்களே ஒழிய மாறாக ஒரு வீறு நடை போடக்கூடியளவிற்கு வளர்க்கப்பட்டதென்று சொன்னால் எங்குமில்லை. எல்லா இடங்களிலும் யுத்த நிறுத்தம். நீண்ட காலப் போர் ஓய்ந்து மாறாக போராடுகின்ற விடுதலை இயக்கங்களை சிதைத்திருக்கின்றதேயொழிய வீச்சாக்கியதில்லை இன்றைக்கு எமது தேசியத் தலைவரது தீர்க்கதரிசனத்தில் நீண்டதொரு பார்வையில் போராட்டத்தினது ஒவ்வொரு அசைவுகளும் பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றபடியால் தான் நாங்கள் இவற்றுக்கு விதிவிலக்காக ஒரு வீச்சோடு இருக்கின்றோம்.

இந்த வீச்சு வீச்சாக இருக்க வேண்டும் உண்மையில் தென்னிலங்கையில் ஏற்படுகின்ற குழப்பங்கள் தற்போதைய அவசரகால நிலைகளும் அந்த அவசரகால நிலைகளுக்குகூடாக ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிழல் யுத்தங்களும் ஆட்சி மாறுகின்ற போது அமைதிக்கு திரும்பலாம். அமைதிக்கு திரும்பி போராட்டத்தை சிதைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கலாம். ஆனால் எதுவுமே எங்களுடைய இலட்சியத்தை வென்றெடுப்பதற்கு உதவப் போவது கிடையாது. திலீபனுடைய 5 ஆம் நாள் நினைவுமங்கிய நேரம் பேச முடியாது சுருண்டு நல்லூர் வீதியில் போடப்பட்டிருந்த பந்தலில் படுத்திருந்த நேரம் 18 ஆண்டுகள் இவற்றையெல்லாம் மீட்டுப் பார்ப்போமாக இருந்தால் எவ்வளவு காலத்தை நாங்கள் எமது மக்களுடைய உணர்வுகளுக்காக செலவு செய்திருக்கின்றோம். இன்று வவுனியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, யாழ்ப்பாணம் என மக்கள் அலையலையாய் திரண்டு தமிழீழம் தான் எங்களின் மூச்சு தமிழீழத்தை அடைவதற்காக ஆயுதங்களைத் தூக்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என மக்கள் எல்லோரும் ஒருமித்த குரலில் தமிழீழமே எங்களின் மூச்சு என கூறிஉத்வேகத்தை கொடுத்துக் கொண்டிருக்கும் நேரம் இந்தக் காலத்தில் எதையும் எதிர்கொள்ளக் கூடிய நிலையில் நாம் தயாராக இருக்க வேண்டும் நாங்கள் இதுவரை குறைந்தளவு கடற்கலங்களை வைத்தே சண்டைகளில் ஈடுபட்டு வந்துள்ளோம். ஆனால் இப்போது பல துறைகளாக பிரிக்கப்பட்டு பலதுறைகள் கடற்படை அலகுகளாக வளர்க்கப்பட்டு கடும் யுத்தத்தை எதிர்கொள்ளக்கூடிய அளவுக்கு கடற்போர் வழிமுறைகளை கற்றுக் கொண்டு அடுத்த பாய்சலுக்கு தயாராகியிருக்கின்றோம். இது இன்றைய காலத்தின் கட்டாயமாகவும் உள்ளது.

நாங்கள் இதுவரை காலமும் எத்தனையோ நெருக்கடிகளுக்கு மத்தியில் எத்தனையோ சூழலுக்கு மத்தியில் வீரச்சாவடைந்த தளபதிகள். போராளிகளினுடைய தியாகங்களுக்கு மத்தியில் வளர்ச்சி பெற்றுள்ளோம் எனவே 70 ஆயிரம் மக்களின் உயிரிழப்போடு தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த விடுதலைப் போரை முடிக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு.

1984ஆம் ஆண்டு தொடக்கம் 1991 ஆம் ஆண்டு வரை விடுதலைப் புலிகளின் கடல்புறா கட்டமைப்பாகவிருந்து.1991.09.20 இல் தான் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு 2005 வரை வளர்ச்சியடைந்து வருகிறது.

இத்தனை ஆண்டுகளில் நாங்கள் நிறைவேற்றிய வரலாற்று வெற்றிகளை விட இனிவரும் காலங்களில் செய்யப்படவுள்ள போர் எல்லா வற்றுக்குமான ஒரு இறுதிப் போராகவும் ஒரு நிரந்தர தீர்வை எட்டக்கூடிய பாய்ச்சலுக்குமான போருக்கு எம்மை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய நேரமுமாகும் எனவே அடுத்தகட்ட நடவடிக்கைக்கு அனைவரும் தயாராக இருக்க வேண்டும்என்றார். (20)

## விடுதலைப்..

திக அரச அதிபர் நா.வேதநாயகன், மாவீரர் கலைவாணனின் தந்தை வேலாயுதம் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தினை தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெற்றது.

தலைமையுரையினையடுத்து கிளிநொச்சி மாவட்ட வெகுஜன ஒன்றியத் தலைவர் அமிர்தலிங்கம், கிளிநொச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை தலைவர் த. பிரபாகரன், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் அ.கேதீஸ்வரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டு போருக்கான அறைகூவல் குறித்த கருத்துரைகளை வழங்கினர். தமிழீழப் போருக்கான அறைகூவல் அறிக்கையினை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த வேளமாலிகிதன் மாநாட்டில் வாசித்தார். தொடர்ந்து நன்றியுரையினை கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொருளாளர் ஏ.வி. கே. மாணிக்கம் நிகழ்த்தினார்.கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பேராளர்கள் கரைச்சி, கண்டாவளை, பூநகரி,பளை பிரதேச செயலர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், மற்றும் பொதுமக்கள் பெருமளவில் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## காவலில்...

கள் எழுவர் கிளிநொச்சிக்கு அழைத்துவரப்பட்டு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறைசீர்திருத்தப்பிரிவு உப பரிசோதகர் அ.சசிதரன் மற்றும் காவல்துறை உறுப்பினர்கள் உறவினர்களை வரவேற்று சந்திப்பிற்கான ஒழுங்கமைப்பினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## திலீபன்..

பாளர் தமிழன்பன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து திலீபனின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் சுபாசினி கந்தையா ஏற்ற மலர் மாலையினை துணுக்காய்வலய கல்விப்பணிப்பாளர் குருஸ் அணிவித்தார். ஆரம்ப நிகழ்வுகளைத தொடர்ந்து மாங்குளம் பிரதேச மக்களால் தேசியத்தலைவர் அவர்களுக்கு நினைவுக் கேடயம் ஒன்று வழங்கப்பட்டது. இக் கேடயம் திலீபன் மருத்துவமனை அபிவிருத்திக்குழு தலைவரினால் முல்லை. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முகுந்தனிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து வரவேற்புரை, ஆசியுரை, சிறப்புரைகள் என்பன இடம்பெற்றது. உரைகளைத் தொடர்ந்து மாங்குளம் வர்த்தகர்களினால் திலீபன் மருத்துவமனை பணியாளர்களுக்கு நினைவு பரிசில்கள் வழங்கப்பட்டது. தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (தீ,05)

## இரு படையினர்.

தாக்குதலில் இரு படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இரு படையினரும் தற்போது திருமலை அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத்தாக்குதல் நடைபெற்று அரை மணிநேரம் கழித்து திருமலை - கண்டி வீதியிலுள்ள காந்தி நகரில் உள்ள படையினரின் காவலரண் ஒன்றின் மீதும் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளபோதும் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனப் படையினர் தெரிவித்துள்ளனர்.

## ஆயுதக்...

தான முயற்சிகள் தங்கியுள்ளன. தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வன்முறைகளே யுத்த நிறுத்தத்தை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை சரியான வகையில் அமுல்படுத்துவது அரசாங்கத்தினதும் விடுதலைப்புலிகளினதும் கடமையாகும். சமாதான நடவடிக்கைகளில் விடுதலைப்புலிகள் அக்கறையுடன் பங்களிப்பு வழங்குவதை வெளிப்படுத்தக்கூடிய வகையில் செயற்பட வேண்டும்.

அத்துடன் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு அமைய வடக்கு கிழக்கில் இயங்கும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக்களைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.


இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும்

இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு ஒஸ்லோ பிரகடனத்திற்கு அமைய ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையில் அமைந்த தீர்வொன்றை இந்தப் பேச்சு வார்த்தைகளினால் பெற்றுக்கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் இலங்கையின் சமாதானப்பேச்சுவார்த்தையின் ஏற்பாட்டாளர்களாக நோர்வே செயற்படுவதற்கு தாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அவர்கள்

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஓராண்டை எட்டியுள்ள நிலையில் அழிவடைந்த பிரதேசத்தை மறுசீரமைப்பதற்கு சர்வதேச சமூகம் உறுதி வழங்கிய நிதியைப்பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், வடக்கு கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்திப்பணிகளின் முன்னேற்றத்திற்கு சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகள் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் அவசியமாகும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் சாதகமான ஒன்றான யுத்த நிறுத்த உடன்படிக்கையை முன்னெடுப்பது இருதரப்பினரினது பொறுப்பாகு மென அதில் குறிப்பிட்டுள்ள அவர்கள் எதிர்வரும் சனாதிபதித்தேர்தலின் பின்னர் நாட்டின் சமாதானச்செயற்பாடுகள் புத்துயிர் பெறும் என தாம் எதிர்பார்ப்பதாகவும், சனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆபத்தை எதிர்நோக்கும் வகையிலான கருத்துக்களைத்தெரிவிப்பதை சகல தரப்பினரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.



மகிந்தவின் சனாதிபதிப் பயணம்....

# ஒருமாதக் குழந்தையை பணயம் வைத்து கொள்ளை! - கரவெட்டியில் சம்பவம்

(நல்லூர்)

வீட்டின் கதவை உடைத்து வீட்டின் உள்ளே புகுந்த திருடர்கள் அங்கிருந்த ஒரு மாதக் குழந்தைப் பிள்ளையைப் பணயம் வைத்து அந்த வீட்டில் இருந்து சுமார் இரண்டு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பொருட்கள் மற்றும் பணத்தைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

கரவெட்டியில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. கரவெட்டியைச் சோந்த வைத்தியகலாநிதி க.சதீஸ் என்பவரின் வீட்டில் இத் துணிகரத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு நேரம் வீட்டினுள் அத்துமீறி உட்பிரவேசித்த திருடர்கள் பயங்கரமான ஆயுதங்களைக் காட்டி ஒரு மாதமே நிரம்பிய பிள்ளையைத் தூக்கிவைத்துக் கொண்டு சத்தம் போட்டால் பிள்ளையைக் கொல்லப் போவதாக பயமுறுத்தியுள்ளார்கள்

இதனைத் தொடர்ந்து வீட்டாரிடம் தாங்கள் கேட்பதைப் போன்று வீட்டில் உள்ள பணம் நகைகளைத் தரும்படி கேட்டு வாங்கிச் சென்றுள்ளார்கள் வீட்டார் பிள்ளையைக் கொன்றுவிடுவார்கள் என்ற பயத்தில் திருடர்கள் கேட்டதையெல்லாம் கொடுத்துள்ளார்கள். நெல்லியடிப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (41)

# பட்டதாரிகள் கவனத்திற்கு!

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பட்டதாரி பயிலுனர்களாக பணியாற்றி நிரந்தர நியமனத்தில் தவறவிடப்பட்ட சகல மாவட்டங்களையும் சேர்ந்த பட்டதாரிப் பயிலுனர்களையும் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் அனைவரையும் இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி மத்தியகல்லூரிக்கு சமூகமளிக்கும்படி கிளிநொச்சி பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர் சங்கம்கேட்டுக் கொண்டுள்ளது.

# நேர்முகத்தேர்வு

கிளிநொச்சி கல்விவலயப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களை நிரந்தர ஆசிரியர்களாக்குவதற்காக நேர்முகத்தேர்வு கீழே குறிப்பிடப்படும். அட்டவணைக்கேற்ப கிளிநொச்சி வலயக்கல்விப்பணிமனையில் நடைபெறும். தனிப்பட்ட கடிதமூலம் அழைக்கப்பட்டவர்கள் தாங்கள் கடமையாற்றும் பாடசாலை அதிபர்களுடன் உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாளை 22ஆம்திகதி பூநகரிக் கல்விக்கோட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், 23ஆம் திகதி கரைச்சிக்கல்விக் கோட்டம், 24ஆம் திகதி கண்டாவளை, பளைக் கல்விக்கோட்டம்.

# படையினர் கெடுபிடி அதிகரிப்பு பொது மக்கள் கடும் விசனம்

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் மீண்டும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள் நாளாந்தம் காலை, நண்பகல் மாலையென இவ் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை பொது மக்கள் மத்தியில் பல் வேறு சந்தேகங்களையும் ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன

முக்கிய வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் என்று வேறுபாடுகள் இன்றி பரவலான முறையில் இவ் ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது தவிர்ந்து சைபிக்கிள்களில் மூளை முடுக்குகள் எல்லாம் சென்றும் கண்காணித்தும் வருகின்றனர்

இத்தகைய செயற்பாடுகள் காரணமாக பொது மக்கள் சிரமங்களுக்கு உள்ளாகும் சம்பவங்களும் ஏற்படுகின்றன.

## தடுத்து...

நீதிமன்றத்திற்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளையில், பொலிசார் மூவரையும் விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு கண்காணிப்புக் குழுவைக் கேட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.